# திகில் திருவிழா!



ராஜேஷ்குமார்

திகில் திருவிழா!

- ராஜேஷ்குமார்

## 1

அந்த நள்ளிரவு வேளையில் விவேக்கின் செல்போன் விழித்துக் கொண்டு குரல் கொடுக்க, விவேக் கொஞ்சமாய் தூக்கம் கலைந்து வலது கையை தலைமாட்டுக்குக் கொண்டுபோய் செல்போனை எடுத்து காதுக்குக் கொடுத்தான்.

''எஸ்...''

மறுமுனையில் ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

''பேசறது விவேக் ஸார்தானே...?''

''ஆமா...''

''ஸார்... என் பேர் பூமா. 'ஸ்பீடி ரெகவர்' ஹாஸ்பிட்டலுக்கு எதிர்ப்புறம் எஸ்.டி.டி. பூத் வெச்சு நடத்திட்டு வர்றேன்.''

''சரி...!''

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும் ஸார்.''

விவேக் சுவர் கடிகாரத்துக்குப் பார்வையைக் கொண்டு போனான். நேரம் 12.15.

''என்ன பேசணும்...?''

''ஒரு முக்கியமான விஷயம் ஸார். போலீஸுக்கு போன் பண்ணலாம்ன்னு இருந்தேன். போலீஸுக்கு விஷயத்தைக் கொண்டு போனா என்னோட பேர் வெளியே

வரும். அதையெல்லாம் நான் விரும்புலை ஸார்...''

''சரி... என்ன விஷயம்... சொல்லு.''

''ஒரு நிமிஷம் ஸார்... கஸ்டமர் ஒருத்தர் போன் பண்ண வர்றார். அவர் போனதும் நானே உங்களுக்கு போன் பண்றேன். ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ் ஸார்...''

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட விவேக் செல்போனை மறுபடியும் தலைமாட்டுக்குக் கொண்டு போனான்.

ரூபலா உல்லன் போர்வைக்குள்ளிருந்து கேட்டாள்: ''யார்ங்க அது போன்ல...?''

''யாரோ... பூமாவாம்...!''

''என்னவாம்...?''

''ஏதோ முக்கியமான விஷயமாம், பேசணுமாம்... ஸ்பீடி ரெகவர் ஹாஸ்பிட்டலுக்கு எதிர்ப்புறம் எஸ்.டி.டி. பூத் வெச்சிருக்காளாம்.''

''என்ன விஷயம்ன்னு சொன்னாளா?''

''அதுக்குள்ளே போன் பண்ண யாரோ கஸ்டமர் வந்துட்டாங்களாம். மறுபடியும் போன் பண்றதா அந்த பொண்ணு சொல்லியிருக்கா.''

''என்னங்க இது... ராத்திரியில் தூங்கக்கூட முடியாமே தொந்தரவு..? செல்போனை ஆஃப் பண்ணி வையுங்க... விஷயம் எதுவாக இருந்தாலும் காலையில் பேசிக் கலாம்...''

''ஏதோ... ஒரு முக்கியமான விஷயம் இருக்கப் போய்த்தான் அந்தப் பெண் போன் பண்ணியிருக்கா...! பார்க்கலாம் என்ன சொல்றான்னு...''

விவேக் காத்திருந்தான். ரூபலா மறுபடியும் தூக்கத்துக்குப் போய்விட - விவேக்கிற்கு தூக்கம் பிடிக்கவில்லை. எழுந்து உட்கார்ந்து ஜன்னல் வழியே இருட்டு வானத்தில் ஒட்டியிருக்கும் வைரத்துணுக்குகளாய் மின்னும் நட்சத்திரங்களை வேடிக்கை பார்த்தான்.

நேரம் கரைந்து 12.30ஐத் தொட்டுவிட்டு 12.45ஐ நெருங்கியது.

'ஒரு கஸ்டமர் அரைமணி நேரமாகவா பேசிக் கொண்டிருப்பான்...?'

ரூபலா இடையே ஒருதடவை கண்விழித்து ''என்ன... உங்க பூமா போன் பண்ணினாளா...?'' என்று கேட்டாள்.



''இல்லை... அங்கே அவளுக்கு என்ன அவஸ்தையோ...?''

''அவ போன் பண்றவரைக்கும் இப்படியே உட்கார்ந்துட்டிருக்கப் போறீங்களா...?''

''இல்லை...!'' விவேக் தன் செல்போனில் பதிவாகியிருந்த பூமாவின் பூத் எண்களை செல்லில் தட்டினான்.

ரிஸீவர் உடனே எடுக்கப்பட்டது.

''யாரு...?''

''பேசறது யாரு... பூமாவா...?''

''ஆமா...''

''நான் விவேக் பேசறேன்.''

''விவேக்கா..! எந்த விவேக்...?''

விவேக்கின் பின்னந்தலையில் சின்னதாய் ஒரு அதிர்ச்சி. ''எந்த விவேக்கா...? பனிரெண்டே கால் மணிக்கு நீ எந்த விவேக்குக்கு போன் பண்ணினியோ அந்த விவேக்...!''

''பனிரெண்டே கால் மணிக்கு நான் உங்களுக்கு போன் பண்ணினேனா...?''

''ஆமா... போன் பண்ணினே... என்கிட்ட ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தைப்பத்தி பேசணும்ன்னு சொன்னே...!''

''ஸாரி... ஸார்... யாரோ உங்கக்கிட்டே விளையாடியிருக்காங்க. நான் சாயந்தரத்திலிருந்து யார்க்கும் போன் பண்ணவேயில்லை.''

''நிஜமா... நீ போன் பண்ணலையா...?''

''இல்லே ஸார்...''

விவேக் குழப்பமாய் செல்போனை அணைத்தான். ரூபலா கேட்டாள். ''என்னங்க... சொல்றா... அந்த பூமா...?''

''அவ எனக்கு போன் பண்ணலையாம்...''

''பின்னே போன் பண்ணினது யார்...?''

''ரூபி...! இதே பூமாதான் பனிரெண்டே கால் மணிக்கு என்கிட்டே பேசினா... குரல் அதே குரல்... நோ டவுட்...!''

''போன் பண்ணிட்டு இப்ப ஏன் இல்லைன்னு சொல்றா...?''

''அதுதான் புரியலை...''

''சரி... படுத்துத் தூங்குங்க...!''

''இல்ல ரூபி...! அந்த பூமாகிட்டே ஏதோ தப்பு இருக்கு. என்னோட செல்போன் நம்பர் டிபார்ட்மெண்ட் பீப்பிளுக்கு மட்டுந்தான் தெரியும். ஆனா அந்த பூமா என்னோட செல்லுக்கு போன் பண்ணியிருக்கா. ஏதோ சொல்லவும் முயற்சி பண்ணியிருக்கா. அதுக்கப்புறம் அவ மனசு மாறியிருக்கலாம்...''

''சரி... அதுக்காக இப்போ உங்களால என்ன செய்ய முடியும்...?''

''இப்போதைக்கு செய்யக்கூடிய காரியம் இது ஒண்ணுதான்...!'' சொன்ன விவேக் செல்போனில் எண்களை ஒற்றி எடுத்தான். மறுபக்கம் ரிங் போய் உடனே ரிஸீவர் எடுக்கப்பட்டு ''ஹலோ'' என்ற குரல் கேட்டது.

''டேய்... விஷ்ணு...!''

''பாஸ்... நீங்களா...! என்ன பாஸ் இந்த நேரத்தல போன்...?''

''ஏண்டா...! இன்னும் நீ தூங்கலையா...? போன் மணி அடிச்சதுமே எடுத்துட்டே...?''

''அது... பாஸ்... 'எஃப்' டீ.வி.யில் இன்னிக்கு ஸ்ட்ரிக்ட்லி அடல்ட்ஸ் படம். கோப்தா பெண்ணி ஒரு முழந்துணியை மட்டும் உடம்புல சுத்திக்கிட்டு ரெண்டரை மணி நேரம் நடிச்ச படம். இப்பதான் முடிஞ்சது... அதுக்குள்ளே ஸ்டார் மூவீஸ்ல இன்னொரு ஜில்பா படம்...!''

''டேய்...! நீ திருந்தவே மாட்டியா...?''

''அதுக்கு சான்ஸே இல்ல பாஸ்...! சரி மோகினிப் பிசாசு வாக்கிங் போகிற இந்த நேரத்துல இந்தப் பொடியனுக்கு எதுக்காக போன்...?''

''உன்னால ஒரு காரியம் ஆகணும்.''

''உடனேவா...?''

''சுடச்சுட...''

''சொல்லுங்க பாஸ்.''

''ஸ்பீடி ரெக்கவரி ஹாஸ்பிட்டல் தெரியுமா...?''

''எம்.ஜி. ரோட்ல இருக்கே...?''

''அதேதான்...! அந்த ஹாஸ்பிட்டலுக்கு எதிரில் ஒரு டெலிபோன் பூத் இருக்கு...''

''அட.... நம்ம பூமா பூத்...!''



விவேக் ஆச்சர்யப்பட்டான்.

''அந்த பூமாவை உனக்குத் தெரியுமாடா...?''

''நல்லா தெரியும் பாஸ்... செவப்பா 'வின்'ன்னு இருப்பா. 24 மணி நேர சர்வீஸ்... பூமாவைக் காட்டிலும் அவ தங்கச்சி ஜோதி சூப்பர் ஃபிகர்.''

''டேய்... ஸ்திரீலோலா...!''

''ஸாரி பாஸ்...! எமோஷனலாயிட்டேன்... விஷயத்தை சொல்லுங்க பாஸ்... அந்த டெலிபோன் பூத்ல எனக்கு என்ன வேலை?''

''நீ உடனே கிளம்பிப் போய் அந்த பூமாவைப் பார்க்கிறே...!''

''பார்த்து...?''

விவேக் இரண்டு நிமிஷ நேரம் செலவழித்து விஷயத்தைச் சொன்னதும் விஷ்ணு பதட்டமானான்.

''பூமா... உங்களுக்கு போன் பண்ணியிருந்தாளா பாஸ்...?''

''ம்...! அதுக்கப்புறம் போன் பண்ணினது நானில்லைன்னு ஏன் மறுக்கணும்...?''

''நான் உடனே கிளம்பிப் போறேன் பாஸ்.''

''அவளை ஃபோர்ஸ் பண்ண வேண்டாம். ஸ்மூத்தா என்கொயர் பண்ணிப்பாரு...''

''சரி... பாஸ்...!''

விவேக் செல்போனை அணைத்து தலைமாட்டில் வைத்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்தான். ரூப்லா சொன்னாள்.

''இனி விஷ்ணு பார்த்துக்குவான்... நிம்மதியா தூங்குங்க...!''

''பெண்கள்கிட்டே பேசி விஷயத்தை வாங்கறதுல கில்லாடி விஷ்ணு. எப்படியும் அரைமணி நேரத்துக்குள்ளே அந்த பூமாவைப் பத்தி ஒரு ஹைலைட்டான விஷயத்தை சொல்லுவான்.''

''பார்க்கலாம்...''

விவேக் கண் மூடி படுக்கையில் மல்லாந்து நிமிஷங்களைக் கரைத்துக் கொண்டிருக்க - சரியாய் பதினைந்து நிமிஷம் கழித்து தலைமாட்டில் இருந்த செல்போன் குரல் கொடுத்தது.

எடுத்தான்.

''என்ன...?''

''நீங்க உடனே புறப்பட்டு ஸ்பாட்டுக்கு வாங்க.''

''ஏன்... என்னாச்சு...?''

''பூமா இப்போ உயிரோடு இல்லை. ஒரு லாரிக்காரன் பூத் மேல் லாரியை மோதி பூமா கசங்கி ரத்தமாய்...''

விவேக் எழுந்தான்.

## 2

விவேக் ஸ்தலம் போய்ச் சேர்ந்தபோது நேரம் ஒன்னே கால். ஸ்பீடி ரெகவரி ஹாஸ்பிட்டலுக்கு முன்பாய் அடர்த்தியாய் ஒரு கும்பல் தெரிந்தது. சுழலும் சிவப்பு விளக்கோடு இரண்டு போலீஸ் வாகனங்கள். கும்பலில் காக்கி யூனிபார்ம்கள் விநாடி நேரம் பார்வைக்குக் கிடைத்து மறைந்தார்கள்.

விவேக் சாலையோரமாய் காரை நிறுத்திவிட்டு இறங்கினான். பிளாட்பாரக் கடையொன்றில் சூடான பாதாம் பால் போர்டு அருகே நான்கைந்து பேர் நடந்த விபத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலை காட்டாமல் சிரித்து கண்ணாடி டம்ளர்களில் பாலை சப்பிக் கொண்டிருந்தார்கள்.

''சரளா அடிக்க... வடிவேலு வேஷ்டியில்லாமே அண்டர்வேரோடு ஓட... ஒரே தமாசு...!''

'அடப்பாவிகளா... மனிதாபிமானம் இப்படி கடுகு சைஸுக்கு போய்விட்டதா...?'

விவேக் நொந்து கொண்டே விபத்து நடந்த ஸ்தலத்துக்குப் போக விஷ்ணு வியர்வை முகமாய் - கவலையாய் எதிர்பட்டான். ''பாஸ்...!''

''எப்படிடா...?''

''நான் வீட்டிலிருந்து புறப்பட்டு ஸ்பாட்டுக்கு வர்றதுக்கு அஞ்சு நிமிஷத்தக்கு முந்தி ஆக்ஸிடெண்ட் நடந்து இருக்கு பாஸ்.''

''லாரி எங்கே...?''

''மோதிட்டு நிக்காமே ஓடிட்டான்... ஹிட் அண்ட் ரன்.''

''லாரி நம்பரை யாராவது நோட் பண்ணியிருக்காங்களா...?''

''இல்ல... பாஸ்...!''



பேசிக்கொண்டே நடந்தார்கள். ரோடு பூராவும் கண்ணாடிச் சில்லுகள் இறைந்து சோடியம் வேப்பர் விளக்கு வெளிச்சத்தில் மின்னின. தகரத்தாலும் பலகைகளாலும் உருவாக்கப்பட்ட அந்த டெலிபோன் பூத் யாரோ பிய்த்து எறிந்த மாதிரி துண்டு துண்டாய் கிடந்தது. நசுங்கிய பி.வி.சி. நாற்காலிக்குப் பக்கத்தில் அந்தப் பெண் மல்லாந்து விழுந்து கிடந்தாள். எல்லாப் பக்கமும் தெறித்த ரத்தம் உறைந்து போயிருந்தது.

விஷ்ணு சொன்னான்.

''ஷி... ஈஸ் பூமா பாஸ்...!''

பீட் இன்ஸ்பெக்டர் முரளிகிருஷ்ணன் வேகவேகமாய் வந்து விவேக்கிற்கு சல்யூட் வைத்தார்.

''ஸார்...''

''லாரியை மடக்கிட்டீங்களா...?''

''இல்ல ஸார்... எல்லா ஹைவேஸ் செக் போஸ்ட்டுகளுக்கும் தகவல் கொடுத்து இருக்கோம். எப்படியும் மடக்கிடுவாங்க ஸார்...''

''இது விபத்தா... இல்லை... வேணும்ன்னே மோதிட்டுப் போனதா...?''

''தெரியலை ஸார்.''

''ஐ... விட்னஸ்...''

''யாரும் இல்லை ஸார்...''

''அந்த பாதாம்பால் கடைக்காரனை விசாரணை பண்ணீங்களா...?''

''பண்ணினேன் ஸார்! சம்பவம் நடந்தபோது அந்த ஆள் கடைக்குள்ளே இருந்திருக்கான் ஸார். சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது லாரி தலை தெறிக்கிற வேகத்தில் போய்க்கிட்டு இருந்ததாக அவனோட ஸ்டேட்மெண்ட்...!''

''ஹாஸ்பிட்டலுக்குள்ளேயிருந்து யாராவது பார்த்திருக்க வாய்ப்பு இருக்கே...!''

''இனிமேல்தான் விசாரிக்கணும் ஸார்.''

''மிஸ்டர் முரளி கிருஷ்ணன்...! இது விபத்து கிடையாது. பூமாவை தீர்த்துக்கட்டுவதற்காகவே லாரியைக் கொண்டு வந்து மேலே விட்டிருக்கிறார்கள். இது மர்டர்... கோல்ட் ப்ளட்டட் மர்டர்...!'' சொன்ன விவேக் விஷ்ணுவிடம் திரும்பினான்.

''விஷ்ணு...!''

"பாஸ்...!''

''டெலிபோன் பூத்துக்குள்ளே பூமா உபயோகப்படுத்
தியமேஜைட்ராயர்களை கொஞ்சம் கிளறிப்பாரு... ஏதா
வது தடயம் கிடைக்கலாம். கம்ப்யூட்டர் பில்லிங்
மெஷின் சேதமாகாமல் இருந்தால் இன்னிக்கு ராத்திரி
பூத்திலிருந்து டயல் செய்யப்பட்ட எண்கள் எது எதுன்னு
பார்த்துடலாம்...''

''அதையெல்லாம் நான் பார்த்துட்டேன் பாஸ். பூமா
உபயோகப்படுத்திய மேஜையில் - இந்த புத்தகம் இருந்
தது. அப்புறம் பேங்க் பாஸ் புத்தகம். மெடிக்கல் ப்ரிஸ்க்
ரிப்ஷன்.''

விவேக் வாங்கிப் பார்த்தான். காலிகோ பைண்ட்
செய்யப்பட்ட புத்தகம். புத்தகத்தின் முதல் பக்கத்தில்
லலிதா லெண்டிங் லைபரரியின் ரப்பர் ஸ்டாம்ப் முத்திரை
தெரிந்தது. புத்தகத்தின் மறு பக்கத்தைப் புரட்ட தலைப்பு
கண்களில் அடித்தது.

### 'ஆவிகளோடு பேசுவது எப்படி...?'

விவேக் விஷ்ணுவைப் பார்த்தான்.

''என்னடா... இது...?''

''எனக்கும் இதே ஆச்சர்யம்தான் பாஸ்...''

''பூமாவுக்கு ஒரு சிஸ்டர் இருக்கிறதாக சொன்னியே...
அந்தப் பொண்ணோட பேர் என்ன...?''

''ஜோதி...!''

''அந்த ஜோதி இப்போ எங்கே...?''

''அழுது அழுது ரெண்டு தடவை மயக்கம் போட்டு
விழுந்துட்டா பாஸ். எதிர்ல இருக்கிற ஹாஸ்பிட்டல்ல
அட்மிட் பண்ணி க்ளுகோஸ் ஏத்திக்கிட்டு இருக்
காங்க...''

''போய்ப் பார்க்கலாமா...?''

''வாங்க... பாஸ்...'' விஷ்ணு ஹாஸ்பிட்டலை
நோக்கி நகர்ந்து போக விவேக் அவனைத் தொடர்ந்து
கொண்டே கையில் இருந்த பாஸ் புக்கைப் பார்த்தான்.
பஞ்சாப் நேஷனல் பேங்கின் எஸ்.பி. புத்தகம். புரட்டிப்
பார்த்தான். கம்ப்யூட்டர் வரவு செலவுகளைப் பதிவு
செய்து இருந்தது.

''விஷ்ணு...! இன்னிக்கு தேதி என்ன...?''

''விடிஞ்சா பதினஞ்சாம் தேதி பாஸ்.''



''நேத்து பதினாலாந்தேதி பூமா பேங்கிலிருந்து ஒரு
பெரிய தொகையை ட்ரா பண்ணியிருக்கா...!''

''பெரிய தொகைன்னா எவ்வளவு பாஸ்...?''

''எழுபத்திரெண்டாயிரம்...''

''இதைப்பத்தி ஜோதிகிட்டே கேட்டுக்கலாம் பாஸ்.''

''அப்புறம்... இந்த மெடிக்கல் ப்ரிஸ்க்ரிப்ஷன்.''

''பார்த்தேன் பாஸ்... கையெழுத்து ரொம்பவும் கிறுக்
கலா இருந்ததால என்ன மருந்துன்னு கண்டுபிடிக்க முடி
யலை.''

''டாக்டர் பேரும் கிடையாது. மருந்தை அழகு பார்ம
ஸியில் போனவாரம் வாங்கியிருக்காங்க... இந்த ப்ரிஸ்க்
ரிப்ஷன்ல இன்னொரு ஆச்சர்யம். பேஷண்ட் பேரும்
கிடையாது.''

''அழகு பார்மஸியில் என்கொயர் பண்ணினா விபரம்
கிடைக்கலாம் பாஸ்...!''

ஸ்பீட் ரெகவரி ஹாஸ்பிட்டலுக்குள் நுழைந்தார்கள்.
உள் நோயாளிகள் தூக்கத்தை தள்ளி வைத்துவிட்டு
ஜன்னல் வழியாக விபத்தை வேடிக்கை பார்த்துக்
கொண்டிருந்தார்கள்.

விவேக் கேட்டான்.

''இந்த ஹாஸ்பிட்டலுக்கு டாக்டர் யாரு...?''

''பேர் விஜயசாரதி பாஸ். முப்பது வயசுதான்
இருக்கும். எம்.டி., எஃப். ஆர்.சி.எஸ்.''

வராந்தாவில் நடந்தார்கள்.

''டாக்டர்... இப்ப இருக்காரா...?''

''இருக்கார்... பூமாவோட சிஸ்டர் ஜோதிக்கு
அவர்தான் ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டிருக்கார்.''

பாதி வராந்தாவைக் கடந்திருந்தபோது டாக்டர் விஜ
யசாரதியே எதிர்பட்டார். அந்தக்காலத்து ஜெமினிக
ணேசன் சாயல். அந்த நள்ளிரவிலும் அப்போதுதான் குளித்
துவிட்டு வந்தவரைப் போல் ஃப்ரஷ்ஷாய் இருந்தார்.
விஷ்ணு அவரை மறித்து ''டாக்டர்...! ஹி... ஈஸ்...''
என்று சொல்லி அறிமுகப்படுத்த முயல டாக்டர் புன்ன
கைத்தார்.

''தெரியும்... க்ரைம்ப்ராஞ்ச்... மிஸ்டர் விவேக்...
என்னைத்தான் அவர்க்குத் தெரியாது...''

விவேக் விஜயசாரதியோடு கை குலுக்கிவிட்டு
கேட்டான். ''டாக்டர்...! பூமாவோட சிஸ்டர் ஜோதி

இப்போ எப்படி இருக்கா...?''
''நவ்... ஷி... ஈஸ்... ஓ.கே! ட்ரிப்ஸ் போய்கிட்டு
இருக்கு. பூமாவோட மரணம் அவளை ஒரு பெரிய அதிர்ச்
சிக்கு உள்ளாக்கியிருக்கு. ரெண்டு நாள்ல சரியாயிடும்...''

''டாக்டர்! ஜோதிகிட்டே நான் கொஞ்சம்
பேசணும்...!''

''இப்போதைக்கு வேண்டாமே... ஷி... ஈஸ்
டோட்டலி அப்செட்...! நாளைக்குக் காலையில்
பேசலாம்...!''

விவேக் தன் கையில் இருந்த மெடிக்கல் ப்ரிஸ்க்ரிப்ஸன்
தாளை விஜயசாரதியிடம் நீட்டினான்.

''டாக்டர்... இதுல எழுதியிருக்கிற மருந்து எந்த
நோய்க்கானதுன்னு சொல்ல முடியுமா...?''

விஜயசாரதி வாங்கிப் பார்த்துவிட்டு தாடைக்கு தன்
வலது கையைக் கொண்டு போய் அழுத்தமாய்த்
தேய்த்தார். ''இந்த ப்ரிஸ்க்ரிப்ஸன்ல எழுதியிருக்கிற மருந்
தோட பேர் 'சைப்லோடெட்ராஸின்'. இது மைண்ட்
டிப்ரஷன் ஆனவங்களுக்கான மருந்து... இன்னும்
கொஞ்சம் டீப்பா சொல்லப்போனா மனநோயாளிகளுக்
கான மருந்து...''

விவேக் சொன்னான். ''டாக்டர்... இந்தப்ரிஸ்க்ரிப்ஷன்
சிட் பூமாவோட டெலிபோன் பூத் மேஜைக்குள்ளே இருந்
தது... மருந்து சீட்டில் பேஷண்ட் பேர் இல்லை. டாக்டர்
பேர் இல்லை. மருந்து சீட்டில் பார்மஸியோட பேர்
மட்டும்தான் இருக்கு. பூமாவுக்குத்தான் இந்த மருந்
துன்னா... அவ ஒரு மனநோயாளியா இருந்திருக்கலா
மோன்னு இப்ப சந்தேகம் வருது... ஆனா எனக்கு அவ
போன் பண்ணிப் பேசும்போது தெளிவாத்தான்
பேசினாள். என்கிட்டே ஏதோ ஒரு முக்கியமான விஷ
யத்தைப் பத்தி பேசணும்ன்னு சொன்னாள். அதுக்கப்
புறம் நானாக போன் பண்ணிக் கேட்டபோது உங்களுக்கு
நான் போன் பண்ணவேயில்லைன்னு சொல்லிட்டாள்.''

''உங்க செல்போனுக்கு பேசினாளா... இல்லை டெலி
போனுக்கா...?''

''செல்போனுக்கு...''

''மிஸ்டர் விவேக்...! நீங்க ஒரு க்ரைம் ப்ராஞ்ச்
ஆபீஸர். உங்க பிரைவஸி செல்போன் நம்பர் பூமாவுக்கு
எப்படி கிடைச்சுது...?''



விஷ்ணு சொன்னான். ''அது என்னாலதான்
டாக்டர்...?''

''எப்படி...''

''நான் அடிக்கடி பூமாவோட டெலிபோன் பூத்துக்
குப்போய் அங்கிருந்து பாஸோட செல்லுக்கு போன்
பண்ணுவேன். அந்த செல்போன் நம்பர் கம்ப்யூட்டர்
பில்லிங் மானிட்டரில் வரும். அதை பூமா நோட் பண்ணி
யிருக்கலாம்...''

''பூமாவுக்கும் உங்களுக்கும் நல்ல பழக்கமா?''

''பழக்கமெல்லாம் கிடையாது டாக்டர். நான் அந்த
டெலிபோன் பூத்துக்கு ஒரு கஸ்டமர். அதுவும் ரெகுலர்
கஸ்டமர் கூட கிடையாது. மாசத்துக்கு ரெண்டு தடவை
இந்த ரோட்டுப்பக்கமா வரும்போது போன் பண்ண
வேண்டியிருந்தால் பூத்துக்கும் பக்கத்துல பைக்கை நிறுத்
துவேன். பூத்துல சில சமயம் பூமா இருப்பா. சில சமயம்
ஜோதி இருப்பா...''

விஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும் போதே பக்கத்து
அறையிலிருந்து வெளிப்பட்ட அந்த நர்ஸ் சுற்றும்
முற்றும் பார்த்துக் கொண்டு விவேக்கை நெருங்கினாள்.

''ஸார்...! என்னோட பேர் வெளியே வராதுன்னு நீங்க
உத்திரவாதம் கொடுத்தா நான் ஒரு விஷயத்தைச்
சொல்றேன். ஏன்னா என்னோட கணவர்க்கு இந்த
போலீஸ் விவகாரங்கள் எல்லாம் பிடிக்காது...''

விவேக் அவளை ஏறிட்டான். ''விஷயத்தை
சொல்லுங்க சிஸ்டர்... அதை நாங்க ரகசியமா வெச்சுக்
குவோம்...''

அந்த நர்ஸ் தவிப்பாய் எச்சில் விழுங்கிவிட்டு
மெல்லிய குரலில் சொன்னாள்.

''ஸார்... டெலிபோன் பூத் மேல லாரி மோதியபோது
நான் ஹாஸ்பிட்டல் காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்
துல நின்னுட்டிருந்தேன். நடு ரோட்ல மெதுவா வந்துட்டி
ருந்த லாரி திடீர்ன்னு வேகம் எடுத்து வலது ப்ளாட்பா
ரத்து பக்கமா போய் பூத்தை மோதி தள்ளிட்டு அதே வேகத்
துல மறுபடியும் ரோட்டுக்கு வந்து கண்ணிமைக்கிற நேரத்
துக்குள்ளே பக்கத்து ரோட்ல திரும்பி போயிடுச்சு.
என்னால சத்தம் கூட போட முடியல்லை. பூமா ரத்தமா
துடிச்சிட்டிருக்கிறதைப் பார்த்த எனக்கு மயக்கமே
வந்துடும் போலிருந்தது... விபத்து நடந்தபோது ரோட்ல

ஒரு ஆள்கூட இல்லை.''

விவேக் கேட்டான்.

''அந்த லாரியோட ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரைப் பார்த்தீங்களா சிஸ்டர்...?''

''பார்க்கலை... ஆனா டிரைவரைப் பார்த்தேன்.''

''ஆள் எப்படியிருந்தான்?''

''டிரைவர் ஒரு ஆண் கிடையாது ஸார்.''

''பின்னே...?''

''ஒரு பெண்...!''

''என்னது பெண்ணா...?''

''ஆமா,... ஸார்... டிரைவிங் சீட்ல உட்கார்ந்துட்டிருந்தது ஒரு பெண்தான். நல்லாவே பார்த்தேன்...''

# 3

விடியற்காலை ஐந்து மணி.

அழகு பார்மஸி அந்நேரத்துக்கும் வாடிக்கையாளர்களின் கூட்டத்தில் இருந்தது. விவேக்கும் விஷ்ணுவும் காரை ஓரம் கட்டி நிறுத்திவிட்டு பார்மஸியின் பக்கவாட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசிக்க கௌண்ட்டரில் இருந்த நபர் அவர்களை வியப்பாய் பார்த்தார்.

''எஸ்...''

விவேக் தன் உத்தியோக அட்டையைக் காட்ட கௌண்ட்டர் நபர் பவ்யமாகி தனக்கு எதிரே இருந்த நாற்காலிகளைக் காட்டினார்.

''உட்கார்ங்க ஸார்...''

விவேக் உட்கார்ந்து கொண்டே தன் கையில் இருந்த ப்ரிஸ்க்ரிப்ஷன் தாளை அவரிடம் நீட்டினான்.

''இதைக் கொஞ்சம் பாருங்க.''

அவர் வாங்கிப் பார்த்தார். விவேக் தொடர்ந்தான்.

''இந்த ப்ரிஸ்க்ரிப்ஷன் தாளில் உங்க பார்மஸியோட பேரும் தேதியும்தான் போட்டிருக்கு. பேஷண்ட்டோட பேரோ டாக்டரோட பேரோ இதில் இல்லை. இதில் எழுதப்பட்டிருக்கிற மருந்தை வெச்சு டாக்டர் யார்ன்னோ பேஷண்ட் யார்ன்னோ சொல்ல முடியுமா...?''

''ஒரு நிமிஷம் ஸார்...!'' சொன்னவர் முன் பக்கம் பார்த்துக் குரல் கொடுத்தார்.



''வேணுகோபால்...! இங்கே கொஞ்சம் வந்துட்டு போங்க...''

தலைநரைத்த அந்த வேணுகோபால் வந்தார். கௌண்ட்டர் ஆள் அவரிடம் ப்ரிஸ்க்ரிப்ஷன் தாளைக் கொடுத்துக் கொண்டே கேட்டார்.

''இது எந்த டாக்டரோட கையெழுத்துன்னு கொஞ்சம் பார்த்து சொல்லுங்க...''

வேணுகோபால் வாங்கிப் பார்த்துவிட்டு 'பளிச்'சென்று சொன்னார். ''இது டாக்டர் வசீகரின் கையெழுத்து...''

''வசீகர்... ஒரு சைக்யாட்ரிஸ்ட் டாக்டர்தானே...?'' விவேக் கேட்டான்.

''ஆமா... ஸார்...''

''இதுல எழுதப்பட்டிருக்கிற சைப்லோடெட்ராலின் மருந்தை வாங்கிட்டுப் போன பேஷண்ட் யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''அது தெரியாது ஸார்... மருந்தை வாங்க பேஷண்ட்டே வரணும்ங்கிறது அவசியம் இல்லையே... யார் வேணும்ன்னாலும் வந்து வாங்கிட்டுப் போலாம். டாக்டர் வசீகர்க்கு இந்த பேஷண்ட் யார்ன்னு தெரிஞ்சு இருக்கலாம்...''

''டாக்டரோட க்ளீனிக் எங்கே இருக்கு...?''

''அபிராமி அவென்யூவில் ஃபர்ஸ்ட் ரோடு. ரெண்டாவது பில்டிங். க்ளீனிக் கீழேயும் வீடு மேலேயும் ஒரே பில்டிங்க்ல இருக்கு ஸார்...''

''தேங்க்யூ...!''

விவேக்கும் விஷ்ணுவும் பார்மஸியை விட்டு வெளிப்பட்டு கார்க்கு வந்தார்கள். அந்த அதிகாலை வேளையில் தன் உடம்பில் இருக்கும் வேண்டாத கொலஸ்ட்ராலைக் கரைப்பதற்காக ஆண்களும் பெண்களும் ஜாக்கிங் சூட்டில் ஓடிக்கொண்டிருந்தார்கள். விஷ்ணு ஒரு குண்டு பெண்ணைப் பார்த்து ''ஹாய்'' என்றான். அவளும் ''ஹாய்'' சொல்லிவிட்டு 'ததும் ததும்' என்று ஓட விவேக் காரில் ஏறிக் கொண்டே கேட்டான்.

''யார்ரா... அவ...?''

''தெரியாது பாஸ்... நாளைக்கு இதே நேரம் வந்து விசாரிக்கணும்...!''

''உயிர் வாழ முதுகும், முதுகுத் தண்டு வடமும்

அவசியம்டா விஷ்ணு...!''

''அது எனக்குத் தெரியாதா பாஸ்...! இப்ப டெய்லி ரன்னிங் ப்ராக்டீஸ் பண்ணிட்டிருக்கேன். அது மாதிரியான நிலைமை ஏற்பட்டால் தப்பிச்சு ஓடத்தான்.''

கார் கிளம்பியது.

''அபிராமி அவென்யூ போயிருக்கியா விஷ்ணு...?''

''ஒரு தடவை போயிருக்கேன் பாஸ். அங்கே வைசாலி மாமின்னு ஒரு மாமி...''

''டேய்ய்ய்...!''

''என்ன பாஸ் நீங்க...! அந்த வைசாலி மாமிக்கு ஐம்பது வயசு. ரங்கோலியில் எக்ஸ்பர்ட். அதைவிட வடாகம் போடறதுல எக்ஸ்பர்ட்... எல்லாத்தையும் விட மாமி பைக்கை ஓட்டுவா பாருங்க... அவ்வை சண்முகி தோத்தா...''

''விஷ்ணு...! பூமாவோட டெலிபோன் பூத் மேல லாரியை மோதவிட்டது ஒரு 'பெண்'ன்னு அந்த நர்ஸ் சொன்னாளே... உன்னால நம்ப முடியுதா...?''

''முடியலை பாஸ்...! டிரைவர் பெண் வேஷம் போட்டுக்கிட்டு லாரியை ஓட்டிக்கிட்டு வந்து இருக்கலாம்...''

''அந்த லாரியை இன்னமும் ட்ரேஸ் பண்ண முடியலைன்னு போலீஸ் சொல்லுது...''

''எனக்கென்னமோ அந்த லாரி ஹைவேஸ் ரோடு பக்கமே போயிருக்காதுன்னு படுது பாஸ். சிட்டிக்கு உள்ளேயே ஏதோ ஒரு ஷெட்ல போய் அடக்கமாயிருக்கும்...! வெளியே போயிருந்தா மாட்டியிருக்கும்.''

''பூமா என்கிட்டே எதையோ சொல்ல விரும்பி போன் பண்ணியிருக்கா. அந்த சமயத்துல போன் பண்ண கஸ்டமர் யாரோ வந்து இருக்காங்க... அதுக்கப்புறம் எனக்கு அவ போன் பண்ணலை.''

''வந்த கஸ்டமர் மேல சந்தேகப்படறீங்களா பாஸ்?''

''ஆமா...! அந்த நபர் பூமாவை மிரட்டியிருக்கலாம் இல்லையா?''

''பாஸ்...! நாம இப்போ சைக்கியாட்ரிஸ்ட் வசீகர்கிட்டே போறோம். அவர் இந்த ப்ரிஸ்க்ரிப்ஷனைப் பார்த்துட்டு பூமாதான் பேஷண்ட்ன்னு சொல்லிட்டா... கேஸ் ஒரு முடிவுக்கு வந்துடும்ன்னு நினைக்கிறேன்.''

''எப்படி சொல்றே...?''



''டாக்டர் வசீகர்க்கு பூமா பேஷண்ட்ன்னா நம்மைப் பொறுத்த வரைக்கும் பூமா ஒரு மனநோயாளிதானே?''

''ஆமா...!''

''ஒரு மன நோயாளியின் நடவடிக்கைகளை நாம பெரிசா எடுத்துக்க வேண்டியது இல்லை...''

''அப்படின்னா டெலிபோன் பூத் மேல லாரி மோதியது?''

''அது உண்மையாவே ஒரு விபத்தாக இருக்கலாமே பாஸ்.''

''எப்படி உண்மையாய் இருக்க முடியும்...? ஒரு லாரி டிரைவர் பெண் வேஷம் போட்டுக்கிட்டு எதுக்காக லாரியை ஓட்டிக்கிட்டு வரணும்...?''

''உண்மையிலேயே ஒரு பெண் லாரியை ஓட்டிக்கிட்டு வந்திருந்தா பாஸ்...?''

''டேய்... குழப்பாதே...! ராத்திரி பூராவும் தூக்கம் கெட்டதுல ஏற்கெனவே மூளை திருநெல்வேலி அல்வா பதத்துக்கு போயாச்சு... நீ அதை டிஸ்டில்ட் வாட்டரா மாத்திடாதே...!''

கார் அபிராமி அவென்யூவுக்குள் நுழைந்தது. மரங்கள் சூழ்ந்த அவென்யூ. எல்லா மரங்களிலும் பறவைகள் சத்தம் போட்டுக் கொண்டு இருக்க - பெண்கள் அபார்ட்மெண்ட் வாசல்களில் குனிந்த தலை நிமிராமல் கோலம் போட்டுக் கொண்டிருந்தார்கள். கிழக்கு திசை சூரியன் மரங்களுக்கு மத்தியில் ஒளிந்து பார்க்க விவேக் காரை அவென்யூவின் முதல் ரோட்டில் திருப்பினான். இரண்டாவது பங்களாவின் வாசலில் அந்த போர்டு தெரிந்தது.

டாக்டர். வசீகர்.
மனநல மருத்துவர்.

விவேக் காரை நிறுத்தினான்.

''பாஸ்...! டாக்டரோட பங்களா ரொம்பவும் ஃபாரின் இருக்கு... நல்ல ப்ராக்டீஸ் போலிருக்கு...''

''நல்ல ப்ராக்டீஸ் இல்லாமே எப்படி போகும்...? இன்னிக்கு ஜனங்க எல்லாரும் பைனான்ஸ் கம்பெனிகளாலும் கம்ப்யூட்டர் டேட்டா கம்பெனிகளாலும் கொஞ்சம் கொஞ்சமா பைத்தியங்களாக மாறிக்கிட்டு வர்றாங்க. போதாக்குறைக்கு இந்த அரசியல்வாதிகள். இனிமேல் டாக்டர்கள்ல சைக்யாட்ரிஸ்ட்களுக்குத்தான்

வேல்யூ...''

காரை விட்டு இறங்கி காம்பௌண்ட் கேட்டை நெருங்க - அந்த உயரமான மனிதர் வெளிப்பட்டார். இடது கையில் வாக்கிங் ஸ்டிக். வலது கையில் நாயைப் பிடித்த சங்கிலி.

விவேக் அவரை எதிர்கொண்டான்.

''டாக்டர் வசீகர்...?''

''மைசெல்ப்...!''

''ஓ... ஸாரி டாக்டர்...! நீங்க வாக்கிங் கிளம்பிட்டு இருக்கீங்கபோலிருக்கு...''

''நோ... ப்ராப்ளம்... நீங்க...?''

விவேக் தன் உத்தியோக அட்டையைக்காட்டி அறிமுகப்படுத்திக் கொண்டதும் அவர் முகம் மாறியது.

''க்ரைம் ப்ராஞ்ச்...?''

''எஸ்...''

''என்ன விஷயம்...?''

''உள்ளே போய் பேசலாமா டாக்டர்...''

''கம்...'' நாய் குரைக்க முயல, அதை அதட்டி போர்டிகோ தூணில் கட்டிவிட்டு விவேக்கையும் விஷ்ணுவையும் வராந்தாவுக்கு கூட்டிப்போனார் டாக்டர் வசீகர்.

வராந்தாவில் நான்கு கூடை நாற்காலிகளும் நடுவே ஒரு டீபாயும் தெரிந்தது.

''ப்ளீஸ்... ஸிட்டட்...!''

மூன்று பேரும் உட்கார்ந்தார்கள்.

டாக்டர் வசீகர் கேட்டார்.

''சொல்லுங்க... என்ன விஷயம்...?''

விவேக் தன் கையில் வைத்திருந்த ப்ரிஸ்க்ரிப்ஷனை வசீகரிடம் நீட்டினார்.

''டாக்டர்! இதில் இருக்கிற கையெழுத்து உங்களுடையதுதானே...?''

டாக்டர் பார்த்துவிட்டு தலையாட்டினார்.

''ஆமா. என்னுடையதுதான்...!''

''இந்த மருந்தை யார்க்கு எழுதிக் கொடுத்தீங்கன்னு சொல்ல முடியுமா...?''

''ப்ரிஸ்க்ரிப்ஷன்ல தேதி இருக்கு! அதை வெச்சு என்னோட டைரியில் அந்த தேதியில் அப்பாயிண்ட்மெண்ட் வாங்கின பேஷண்ட்கள் யார் யார்ன்னு பார்த்தா தெரியலாம்.''



''ப்ளீஸ் டாக்டர்...''

''உடனே வேணுமா...?''

''ஆமா...''

''எதுக்காக இந்த என்கொயரின்னு தெரிஞ்சுக்கலாமா?''

''டாக்டர்... உங்களுக்கு 'பூமா'ன்னு யாரையாவது தெரியுமா...?''

''பூமா...?''

''எஸ்... ஸ்பீடி ரெகவரி ஹாஸ்பிட்டலுக்கு எதிரில் அந்தப் பெண் பூமா டெலிபோன் பூத் வெச்சிருந்தா...''

''ஸாரி...! எனக்குத் தெரியலை.''

விவேக்கும் விஷ்ணுவும் சட்டென்று ஒரு விநாடி நேரத்துக்கும் குறைவான அவகாசத்தில் பார்வைகளை பரிமாறிக் கொண்டார்கள். விவேக் வசீகரை ஏறிட்டான்.

''ஓ.கே... டாக்டர்... உங்க அப்பாய்ண்ட்மெண்ட் டைரியைப் பார்த்து இந்த ப்ரிஸ்க்ரிப்ஷனுக்குரிய பேஷண்ட் யார்ங்கிறதை சொல்லுங்க போதும்...! என்கொயரிக்கான காரணத்தைப் பின்னாடி சொல்றோம்...''

''ஒரு நிமிஷம்...!'' சொன்ன வசீகர் வீட்டுக்குள்ளே போய் அந்த தடிமனான டைரியை எடுத்து வந்தார். பக்கங்களைப் புரட்டி குறிப்பிட்ட தேதிக்கு வந்ததும் பார்வையை நிறுத்தினார். மெல்ல சொன்னார்.

''அன்னிக்கு சாட்டர்டே...! க்ளினிக் அரைநாள்தான் இருந்தது. மொத்தம் அஞ்சு பேஷண்ட்டை பார்த்திருக்கேன்...''

''அந்த பேஷண்ட்ஸ் யார் யார்ன்னு சொல்ல முடியுமா டாக்டர்...?''

''பொதுவா அந்த விபரம் சொல்லக்கூடாது! இருந்தாலும் இது போலீஸ் என்கொயரி. நான் சொல்லியாகணும்...'' டாக்டர் வசீகர் டைரியைப் பார்த்துக் கொண்டே பெயர்களை சொல்ல ஆரம்பித்தார்.

''நீலகண்டன், விஜயகுமார், தனபாலன், ஜோதி, நாகலட்சுமி...''

ஜோதி பெயரைக் கேட்டதும் விவேக் லேசாய் திடுக்கிட்டான்.

''டாக்டர்...! நாலாவதா ஒரு பேர் சொன்னீங்களே ஜோதிதானே...?''

ஆமா...!''

''அந்த ஜோதியோட அட்ரஸ் என்னான்னு சொல்ல முடியுமா டாக்டர்?''

''கேஸ்ஹிஸ்டரி ஃபைலில்தான் அட்ரஸ் இருக்கும்.''

டாக்டர் மறுபடியும் உள்ளே போய் ஒரு ஃபைலைக் கொண்டு வந்தார்.

''ஃபைலில் போட்டோவும் இருக்கு...! இந்தப் பொண்ணான்னு பாருங்க...''

விவேக்கும் விஷ்ணுவும் டாக்டரிடமிருந்து ஃபைலை வாங்கி பிரித்தார்கள். ஃபைலின் முதல் பக்கத்திலேயே பாஸ்போர்ட் சைஸ் போட்டோவில் ஜோதியின் முகம் தெரிந்தது.

விஷ்ணு கிசுகிசுத்தான்.

''பாஸ்...! இவதான் பூமாவோட சிஸ்டர் ஜோதி!''

வசீகர் சொன்னார்.

''இந்த பொண்ணுக்குத்தான் அந்த ப்ரிஸ்க்ரிப்ஷன் மருந்தை எழுதிக் கொடுத்தேன்.''

விவேக் கேட்டான்.

''ஜோதிக்கு என்ன பிரச்னை டாக்டர்...?''

''கொஞ்சம் விசித்திரமான பிரச்னைதான்!'' வசீகர் சொல்ல ஆரம்பித்த விநாடி - விவேக்கின் பாக்கெட்டில் இருந்த செல்போன் குரல் கொடுத்தது.

''எக்ஸ்க்யூஸ்மீ... டாக்டர்.'' விவேக் செல்போனை எடுத்துப் பேசினான்.

''எஸ்...!''

''ஸார்...! நான் இன்ஸ்பெக்டர் முரளிகிருஷ்ணன்.''

''சொல்லுங்க முரளிகிருஷ்ணன்...! பூமாவோட பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்ண ஜி.ஹெச். டாக்டர் கிட்டே சொல்லிட்டீங்களா...?''

''போஸ்ட் மார்ட்டமே முடிஞ்சது ஸார். ரிப்போர்ட் இப்போ கையில் இருக்கு...!''

''ரிப்போர்ட் என்ன சொல்லுது...?''

''பூமா ரெண்டு மாச கர்ப்பம் ஸார்.''

## 4

விவேக் சில விநாடிகள் நிதானித்துவிட்டு இன்ஸ்பெக்டர் முரளிகிருஷ்ணனிடம் கேட்டான்.



''இந்த விஷயத்தை ப்ரஸ் பீப்பிளுக்கு சொல்லிட்டீங்களா?''

''இல்ல... ஸார்...''

''இனிமேலும் சொல்லாதீங்க... போஸ்ட் மார்ட்டம் பண்ணின டாக்டர் யாரு...?''

''மாதவமேனன் ஸார்...!''

''அவர்கிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிடுங்க.''

''எஸ்... ஸார்...''

''பிரஸ்பீப்பிள்கிட்டே பேசும்போது எக்காரணத்தைக் கொண்டும் இது மர்டர்ன்னு எஸ்டாப்ளிஷ் பண்ணாதீங்க... விபத்தாகவே இருக்கட்டும்... 'டெலிபோன் பூத்தில் லாரி மோதி பெண் மரணம்' என்கிற தலைப்புச் செய்தியே எல்லா பத்திரிகைகளிலும் வரட்டும்...''

''எஸ்... ஸார்.''

விவேக் செல்போனில் இன்ஸ்பெக்டர் முரளிகிருஷ்ணனோடு பேசுவதற்குள் விஷ்ணு டாக்டர் வசீகர்க்கு பூமாவின் மரணத்தைப் பற்றி சொல்லி முடித்து இருந்தான். அவருடைய முகம் இப்போது இறுக்கத்திலும் கலக்கத்திலும் இருந்தது. விவேக் கேட்டான்.

''டாக்டர்! ஜோதியைப் பத்தி ஏதோ சொல்ல வந்தீங்க... அது என்னான்னு தெரிஞ்சுக்கலாமா...?''

''அது... அது... வந்து... ஷி... ஈஸ் மென்ட்டலி டிஸ்டர்ப்ட்...''

''இன் வாட் வே டாக்டர்...?''

''ஒவ்வொரு அமாவாசையன்னிக்கும் பௌர்ணமியன்னிக்கும் ராத்திரி பனிரெண்டு மணியிலிருந்து விடிகாலை மூணு மணி வரைக்கும் ஜோதியின் நடவடிக்கைகள் விசித்திரமாக இருக்கும். அந்த குறிப்பிட்ட ரெண்டு நாட்களிலும் ஜோதிக்கு சாயந்தரம் ஆறுமணிக்கே தூக்கம் வந்துடும். தூக்கத்தை கண்ட்ரோல் பண்ணவே முடியாது. பட் சரியா பனிரெண்டு மணிக்கு முழிப்பு வந்துடும். அப்படி முழிப்பு வரும்போதே ஜோதியோட இயல்பான பெண்குரல் கரகரப்பு தட்டி ஆண்குரலாக மாறியிருக்கும். தனக்குத்தானே ஏதோ பேசிக்கிட்டிருப்பா. சில சமயம் வீட்டை விட்டு வெளியே போய் தெருமுனை வரைக்கும் நடந்துட்டு வர்றதும் உண்டு. இது விடிகாலை மூணு மணி வரைக்கும்தான். அப்புறம் படுத்து தூங்கி - காலையில் எழுந்திரிக்கும்போது ஜோதி நார்மலுக்கு வந்து

இருப்பா.''

– விவேக், விஷ்ணு இருவரும் பிரமிப்பிலிருந்து விலகாமல் ஒரே குரலில் கேட்டார்கள்.

''இது எப்படி டாக்டர்...?''

''தெரியலை. ஒண்ணும் புரியலை. மருந்துவரீதியாய் பார்க்கும்போது ஜோதி ஆஸ் நார்மல்... ஹெல்த் பாய்ண்ட் பர்பெக்ட்.''

''பின்னே ஜோதியோட அப்நார்மல் நடவடிக்கைக்கு வேறு எது காரணமாக இருக்க முடியும் டாக்டர்...?''

''டாக்டர் கோவர்த்தன ரெட்டியை உங்களுக்குத் தெரியுமா மிஸ்டர் விவேக்...?''

''தெரியும்...! கார்டியாலிஜிஸ்ட்! ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட்களில் டாக்டர் கோவர்த்தன ரெட்டிதான் நம்பர் ஒன். ஒரு ஃபங்க்ஷன்ல அவரைப் பார்த்து இருக்கேன். ஏன் அவர்க்கு என்ன...?''

''அவர் என்னுடைய நண்பர். ஜோதியைப் பத்தி கோவர்த்தன ரெட்டிகிட்டே சொன்னபோது அவர் என்ன சொன்னார் தெரியுமா?'',

''என்ன சொன்னார்...?''

''ஜோதியை ஒரு ஆவி பிடித்துள்ளதாகவும் அதன் பிடியிலிருந்து ஜோதி விடுபட இன்னமும் இரண்டு வருட காலம் பிடிக்கும் என்றும் என்னிடம் சொன்னார்.''

''ஒரு கார்டியாலிஜிஸ்ட் டாக்டர் ஆவிகளை நம்பற விஷயம் ஆச்சர்யமாயிருக்கே...?''

''கோவர்த்தன ரெட்டி ஒரு கார்டியாலஜிஸ்ட் டாக்டர் மட்டும் இல்லை. ஆவிகளை ஆராய்ச்சி செய்பவர் கூட. ஆவிகளைப் பற்றி நிறைய புத்தகங்களை எழுதியிருக்கார்.''

''ஜோதியை அவர் வந்து பார்த்தாரா?''

''ம்... ஒரு தடவை வந்து பார்த்தார். அவரைப் பார்த்ததுமே ஜோதி அப்படியே நடுங்கி ஒடுங்கிப் போய் மண்டியிட்டு உட்கார்ந்து விட்டாள்.''

''அதைப் பார்த்ததும் உங்களுக்கே ஆவிகள் மேல் நம்பிக்கை வந்திருக்குமே...?''

''வந்தது...! சில நிமிடங்கள் வரை அந்த நம்பிக்கை இருந்தது. அதுக்கப்புறம் நம்பிக்கை இல்லை... ஜோதியை இன்னும் ஒரு ஆறு மாதத்துக்குள்ளே குணப்படுத்திக் காட்டறதா டாக்டர் கோவர்த்தன் ரெட்டிகிட்டே



சபதம் போட்டேன். அது உங்களால முடியாதுன்னு அவர் சொல்லிட்டுப் போய்ட்டார். பட் சபதத்திலிருந்து நான் பின் வாங்கலை.''

''டாக்டர்...! பூமாவோட மரணத்தைப் பார்த்ததில் இருந்து ஜோதி அப்செட்டாகி இப்போ கிட்டத்தட்ட கோமா ஸ்டேஜில் இருக்கா. சுயநினைவுக்கு வந்தாலும் ஒரு ரெண்டு நிமிஷம்தான். அந்த ரெண்டு நிமிஷமும் ஒரே திக்கை வெறிச்சுப் பார்த்தபடி இருந்துட்டு மயக்கமாயிடுறா... அவ சுயநினைவுக்கு திரும்பினாத்தான் பூமாவோட மரணத்தில் இருக்கிற குழப்பம் தெளியும்.''

''ஜோதி இப்போ எந்த ஹாஸ்பிட்டலில் இருக்கிறதாக சொன்னீங்க?''

''ஸ்பீடி ரெகவரி ஹாஸ்பிட்டல்.''

''நான் ஜோதியை வந்து பார்க்கலாமா?''

''வாங்க... டாக்டர்...! அந்த ஹாஸ்பிட்டலின் டாக்டர் விஜயசாரதி உங்களுக்கு நல்ல பழக்கம்தானே...?''

''அப்படி சொல்ல முடியாது. டாக்டர்ஸ் அஸோசியேஷன் மீட்டிங்கில் பார்த்துக் கொள்ளும்போது 'ஹலோ' சொல்லிக் கை குலுக்கிக் கொள்வதோடு சரி...''

''ஜோதியை நீங்க எத்தனை மணிக்கு பார்க்கவர்றீங்க டாக்டர்...?''

''பத்து மணிக்கு...''

விவேக் எழுந்து கொண்டான், ''நீங்க வரும் போது நாங்களும் அங்கே இருப்போம் டாக்டர்,..''

''ப்ளீஸ்...!''

வசீகரிடம் விடைபெற்றுக் கொண்டு விவேக்கும் விஷ்ணுவும் வெளியே வந்தார்கள்.

''பாஸ்...!''

''என்னடா...?''

''கேஸ் மணிரத்னம் ஸ்டைலிலிருந்து மாறி விட்டலாச்சார்யா ரேஞ்ஜ்க்கு போயிட்டிருக்கு... இனிமே கேஸை டீல் பண்றதாயிருந்தா... ரெண்டு பேரும் வேப்பிலைக் கொத்தை கையில் வெச்சுக்கணும் போலிருக்கு. தண்டையார்பேட்டையில் எனக்குத் தெரிஞ்ச மோடி மஸ்தான் ஒருத்தன் இருக்கான். அவன்கிட்ட போய் ரெண்டு பேரும் முண்டாவில் தாயத்து கட்டிக்கலாமா பாஸ்...''

''டேய்... பேத்தாமே வாடா...!''

''பாஸ்...! உங்க மனசுக்குள்ளே நீங்க இப்போ எதைப்

பத்தி நினைச்சுட்டிருக்கீங்கன்னு சொல்லட்டுமா?''

''சொல்லு... பார்க்கலாம்...!''

'' 'பூமாவோட ரெண்டு மாச கர்ப்பத்துக்கு யார் காரணமாய் இருப்பாங்க...?' இதுதானே உங்க கரண்ட் தாட்''

''நீ கில்லாடிடா...!''

''பாராட்டுக்கு நன்றி பாஸ்...''

''பூமாவோட கர்ப்பத்துக்கு யார் காரணம்ங்கிறதை எப்படி கண்டுபிடிக்கப் போறோம்...?''

''எனக்குத் தெரிஞ்ச ஒரு வழியை சொல்லட்டுமா பாஸ்...?''

''சொல்லு...!''

''பூமாவும் ஜோதியும் வைடூர்யா அபார்ட்மெண்ட்டில் ஒரு ப்ளாட்டில் தங்கியிருந்தாங்க. கிட்டத்தட்ட நூறு குடித்தனங்கள் உள்ள பகுதி அது. அந்தப் பகுதியில் இருக்கிற அழகான இளைஞர்களை சர்வே எடுத்தா போதும். எவனாவது ஒருத்தன் மாட்டுவான்...''

''டேய்...! இது கொக்கு தலையில் வெண்ணெய்! எனக்கென்னமோ ஒர்க்-அவுட் ஆகும்ன்னு தோணலை... அக்கா பூமாவும் தங்கை ஜோதியும் யார் துணையும் இல்லாமே அபார்ட்மெண்ட்ல இருந்திருக்காங்க... அக்கம் பக்கத்துல என்கொயரி பண்ணிப் பார்த்தா ஏதாவது விபரம் கிடைக்கலாம்...''

விவேக் கார்க்குள் ஏறி உட்கார்ந்தான். இக்னீஷியனை உசுப்பிக் கொண்டிருந்தபோது செல்போன் குரல் கொடுத்தது. எடுத்து ''யாரு...?'' என்றான்.

''விவேக்... ஸாரா...?''

''ஆமா...!''

''ஸார்... நான் 'தினமல்லிகை' டெய்லியோட எடிட்டர் பைரவமூர்த்தி பேசறேன்...''

''சொல்லுங்க...!''

''நீங்க உடனடியா என்னோட ஆபீஸுக்கு புறப்பட்டு வர முடியுமா...?''

''என்ன விஷயம்...?''

''போன்ல எதுவும் வேண்டாம் ஸார். நீங்க நேர்ல வந்துட்டா பரவாயில்லை...''

''இப்ப வர்றேன்...'' சொன்ன விவேக் செல்போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு விஷ்ணுவை ஏறிட்டான்.



''விஷ்ணு...! நீ டாக்டர் வசீகர் கார்ல ஸ்பீடி ரெகவரி ஹாஸ்பிட்டலுக்குப் போயிடு... அவர் ஜோதியைப் பார்த்துட்டு என்ன சொல்றார்ங்கிறதை நோட் பண்ணிக்க... நான் இப்போ 'தினமல்லிகை' பத்திரிக்கை ஆபீஸுக்கு போறேன்...''

''எதுக்கு பாஸ்...?''

''எனக்கே தெரியாது. எடிட்டர் பைரவ மூர்த்தி வரச் சொல்றார். காரணம் இல்லாமே என்னை அவர் கூப்பிட மாட்டார்.''

''போய்ட்டு வாங்க... பாஸ்! கூடவே ஒரு ரிக்வெஸ்ட்...!''

''எனக்குத் தெரியும்...! உன்னோட ரிக்வெஸ்ட் என்னான்னு எனக்கு தெரியும்டா...''

''தெரியுமா பாஸ்...?''

''தெரியும்... பத்திரிகை ஆபீஸ் ரிசப்ஷன்ல பாக்கியலட்சுமின்னு ஒரு பொண்ணு இருப்பா... அவகிட்டே விஷ்ணு உன்னை விசாரிச்சான்னு சொல்லணும். அவ்வளவுதானே!''

''அவ்வளவுதான்... பாஸ்...!''

''வெறுமனே விசாரிச்சா போதுமா... இல்லை ஏதாவது மெசேஜ் இருக்காடா...?''

''மெசேஜ் இருக்கு பாஸ்... ஆனா...!''

''அது என்னான்னு சொல்லுடா... அதையும் சொல்லிடறேன்...!''

''வேண்டாம் பாஸ்... அது மரியாதையில்லை. 'பாக்கி'யை ரெண்டு நாள் கழிச்சு பார்க்கும் போது சொல்லிக்கிறேன்.''

'' 'பாக்கி'யா...?''

''அது பாக்கியலட்சுமியோட மினி நேம் பாஸ்.''

''அடப்பாவி...!'' விவேக் காரை நகர்த்தினான். 'தினமல்லிகை' பத்திரிக்கை ஆபீஸை நோக்கி காரை மிதமான வேகத்தில் விரட்டிக் கொண்டுபோய்ச் சேர்ந்தபோது ஆசிரியர் வைரவ மூர்த்தி முன்னறையிலேயே எதிர்பட்டார்.

''வாங்க... ஸார்...'' கூட்டிக் கொண்டு போய் ஏ.ஸி. அறையில் உட்காரவைத்தார்.

''என்ன மிஸ்டர் பைரவமூர்த்தி... எதுக்காக என்னை நேர்ல வரச்சொன்னீங்க...!''

''இந்தக் கவிதையைப் படிங்க...''

ஒரு பேப்பரில் ஸ்கெட்ச் பேனாவால் எழுதப்பட்ட அந்தக் கவிதைத்தாளை நீட்டினார் பைரவமூர்த்தி.

நிலவுக்கு வானம்
தூரம் இல்லை.
தாமரைக்கு தண்ணீர்
தூரம் இல்லை.
மண்ணுக்கு வேர்கள்
தூரம் இல்லை.
மலர்களுக்கு வாசனை
தூரம் இல்லை.
என்னைப் பிரிந்து போய்விட்ட
பூமாவே - நீயும் எனக்கு
தூரம் இல்லை.
உன் நினைவுகள் எனக்கு
எட்டுகிற தூரம்தான்.

- இப்படிக்கு உன்னுடைய நான்.

விவேக் அந்தக் கவிதைஷ்யப் படித்துவிட்டு திகைப்பாய் நிமிர்ந்தான்.

''இது யார் எழுதின கவிதை...?''

''அவன் பேர் பூபாலன். அரைமணி நேரத்துக்கு முன்னாடி இங்கே வந்து ஒரு விளம்பரம் கொடுக்கணும்ஞ்னு சொன்னான். ஆள் குடி போதையில் இருந்தான். 'என் பூமாவுக்கு புஷ்பாஞ்சலி' என்கிற தலைப்பில் இந்தக் கவிதையை முதல் பக்கத்தில் வலதுபுற எட்டாவது பத்தியில் போடச் சொன்னான். கட்டணத் தொகை ஐயாயிரம் ரூபாய் ஆகும்ன்னு சொன்னேன். உடனே கையில் இருக்கிற வாட்ச், மோதிரம், கொஞ்சம் நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து மேஜை மேல் வெச்சுட்டு 'என்கிட்ட இருக்கிற ஆஸ்தியே இவ்வளவுதான். இதை வெச்சுக்கிட்டு விளம்பரத்தைப் போடுங்க'ன்னு சொன்ன்ான். சொல்லிக்கிட்டு இருக்கும்போதே பேண்ட் பாக்கெட்டுக்குள் இருந்து ஒரு குவார்ட்டர் விஸ்கி பாட்டிலை எடுத்து மடமடன்னு குடிக்க ஆரம்பிச்சான். குடிச்சு முடிஞ்சதும் அவனால நிக்க முடியலை. அப்படியே சுவத்துக்கு சாய்ஞ்சு உட்கார்ந்துட்டான். நான் இந்தக்



கவிதையை மறுபடியும் படிச்சுப் பார்த்தபோது 'பூமா' என்கிற பேர் வரவும் லாரி மோதி டெலிபோன் பூத்துக்குள் இருந்த பூமா இறந்து போன சம்பவம் நினைவுக்கு வந்தது. குடிச்சுட்டு சுயநினைவு இல்லாமே கிடந்தவனை சோதனை பண்ணிப் பார்த்தபோது ஆட்டோ டிரைவிங் லைசென்ஸ் கிடைச்சுது. லைசென்ஸ் அட்டையில் அவனோட போட்டோவும் பூபாலன் என்கிற பேரும் இருந்தது. இந்த பூமா கேஸை நீங்க டீல் பண்ணிட்டிருக்கிற விஷயம் தெரிஞ்சதுனால உங்களுக்கு போன் பண்ணினேன்.''

''அந்த பூபாலன் இப்ப எங்கே...?''

''போதை தலைக்கேறி மயங்கிக் கிடந்தவனை உள்ளேயிருக்கிற ரூம்ல கொண்டு போய் படுக்க வெச்சு இருக்கிறோம்...''

''வாங்க பார்க்கலாம்...'' விவேக்கும் பைரவமூர்த்தியும் எழுந்து பத்திரிகை ஆபீஸின் உள்ளே இருந்த அறைக்குப் போனார்கள்.

அந்த இளைஞன் சோபாவில் மயங்கிக் கிடந்தான். காக்கி பேண்ட், வெள்ளை சட்டை. படியாமல் சிலும்பி நிற்கும் கேசம்.

விவேக் அந்த இளைஞனை நெருங்கி வலதுபக்க தோள்பட்டையைப் பிடித்து உசுப்பி மல்லாத்தினான்.

இளைஞன் மல்லாந்தான்.

கண்கள் நிலைத்துப் போய் - கடைவாயில் ரத்தம் வழிந்திருக்க இறந்து போயிருந்தான்.

## 5

''பைரவ மூர்த்தி...!''

''ஸார்...'' திகிலில் உறைந்து போயிருந்த அவர் கலைந்தார்.

''பக்கத்துல டாக்டர்ஸ் யாராவது இருக்காங்களா?''

''நரசிம்மன்னு சில்ட்ரன் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் ஒருத்தர் இருக்கார் ஸார்...''

''போய் கூட்டிட்டு வரச் சொல்லுங்க...!''

''ஆள் செத்துட்டானா ஸார்...?''

''எஸ்...''

''வந்து என்கிட்டே பேசும்போது நல்லாயிருந்தான் ஸார்...''

''எப்படி மரணம்ன்னு டாக்டர்கிட்டே கேட்போம்.''

பைரவமூர்த்தி பதட்டமாய்க் கிளம்பிப் போனார். விவேக் அந்த இளைஞனின் பக்கமாய் மண்டியிட்டு உட்கார்ந்து அவனுடைய சட்டை பாக்கெட்டுகளைத் தடவிப் பார்த்தான்.

சட்டையின் உள் பாக்கெட்டில் நான்காய் மடித்து வைத்திருந்த அந்தக் கடிதம் கிடைத்தது. விவேக் எடுத்து பிரித்துப் படித்தான்.

இந்த உலகில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிற அனைத்து ஜீவராசிகளுக்கும் என் கடைசி வணக்கம். அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால் அதில் நான் மனிதனாகப் பிறக்காமல் வேறு ஏதாவது ஒரு ஜீவராசியாகப் பிறக்க நீங்கள் எல்லோரும் வேண்டிக் கொள்ளுங்கள். மனிதனாகப் பிறந்த ஒருவனுக்கு எதில் வேண்டுமானாலும் இழப்பு ஏற்படலாம். காதலில் மட்டும் இழப்பு ஏற்பட்டுவிடக்கூடாது. என் பூமாவே இந்த பூமியில் இல்லையென்று ஆகிவிட்ட பிறகு நான் உயிர்வாழ விரும்பவில்லை. என்னையும் பூமாவையும் ஒரே சிதையில் வைத்து தகனம் செய்யுங்கள். எங்கள் சாம்பல்களாவது இந்த காற்று மண்டலத்தில் ஒன்றாய் கலந்து சுற்றட்டும்.

இப்படிக்கு,
பூபாலன்.

விவேக் கடிதத்தைப் படித்துவிட்டு பூபாலனின் சட்டை பாக்கெட்டில் வேறு ஏதாவது கிடைக்குமா என்று தேடிக் கொண்டிருந்தபோது பைரவமூர்த்தி டாக்டர் நரசிம்மனோடு உள்ளே வந்தார்.

நரசிம்மன் பூபாலனை இரண்டு நிமிஷ நேரம் சோதித்துவிட்டு விவேக்கிடம் நிமிர்ந்தார்.

''பாய்ஸன் ஆல்கஹால்... அந்த பாட்டில் இருக்கா...''

விவேக் சோபாவுக்கு கீழே குனிந்து பார்க்க அந்தக் காலியான குவார்ட்டர் விஸ்கி பாட்டில் கிடைத்தது.

பாட்டிலை எடுத்து டாக்டரிடம் கொடுத்தான் விவேக். டாக்டர் அதை வாங்கி முகர்ந்து பார்த்துவிட்டு ''பாய்ஸன் தான்...!'' என்றார்.

பைரவ மூர்த்தி குறுக்கிட்டு சொன்னார். ''இங்கே



வரும்போது கொஞ்சம் நிதானத்துல இருந்தான் டாக்டர். அதுக்கப்புறம் பாட்டிலை எடுத்துக் குடிச்சான். அதுலதான் விஷம் கலந்திருக்கான்.''

''பாடியை போஸ்ட்மார்ட்டம் பண்ணினா பாய்ஸன் எது மாதிரியான ஜாதின்னு தெரிஞ்சுடும்...'' டாக்டர் சொல்லிக் கொண்டிருக்க விவேக் அவர் கையில் இருந்த பாட்டிலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மனசுக்குள் நீளமாய் ஒரு மின்னல் வெட்டியது.

## 6

விவேக்கும் விஷ்ணுவும் அந்த இருட்டான சந்தில் நடந்தார்கள். நேரம் எட்டரை மணி இருக்கலாம்.

'இங்கே மூத்திரம் பெய்கிறவர்கள் மனிதர்கள் அல்ல' - என்று சுவரில் எழுதியிருந்த அறிவிப்பை அலட்சியப்படுத்திவிட்டு, இந்நாட்டு மன்னர்களில் இருவர் குத்துக்காலிட்டு உட்கார்ந்து கடமையைச் செய்து கொண்டிருந்தார்கள்.

''விஷ்ணு...!''

''பாஸ்...!''

''எதிர்ல ஒருத்தன் வர்றான். விசாரி...''

பீடிப்புகையோடு வந்த அந்த நபரை விஷ்ணு நிறுத்தினான்.

''கடலைக்கார சந்து எதுங்க...?''

''பக்கத்து சந்து...'' பீடிப்புகை விஷ்ணுவின் முகத்தில் மோதி விலகியது.

''ஆட்டோ டிரைவர் பூபாலன் வீடு எதுன்னு தெரியுங்களா...?''

''தெரியலையே...!'' அவன் நகர்ந்துவிட விவேக், விஷ்ணு இருவரும் அந்த சந்தைக் கடந்து சிறிது தூரம் ட்யூப்லைட் வெளிச்சத்தில் நடந்தார்கள். பொன்னம்மா இட்லிக்கடை பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் மும்முரமாய் இயங்கிக் கொண்டிருந்தது. காற்றில் புரோட்டாவாசனை.

''பாஸ்...! பொன்னம்மா இட்லிக்கடை ஆசியாவிலேயே ஃபேமஸ். பொன்னம்மாவுக்கு ஆட்டோ டிரைவர் பூபாலனை தெரிஞ்சிருக்கலாம்...''

''போய்க் கேட்டுட்டு வா...''

விஷ்ணு போனான். அந்த நிமிஷம் முடிவதற்குள்

திரும்பி வந்தான்.

''என்னடா...!''

''இப்படியே போனா முனீஸ்வரன் கோயில் வ்ருமாம். அதுக்குப் பக்கத்துல ஒரு ஒர்க்ஷாப். அதுக்குப் பக்கத்துல குடிசை மாதிரி வீடாம். அதுதான் பூபாலனின் ஜாகை.

நடந்தார்கள்.

''பாஸ்... திரும்பிப் போகும்போது பொன்னம்மா கடையில் 'ஜோதிகா இட்லி' சாப்பிட்டு போலாமா?''

''அதென்ன ஜோதிகா இட்லி? குஷ்பு இட்லிதானே இருந்தது...''

''இப்போ ட்ரெண்ட் மாறிப் போச்சு பாஸ். ஜோதிகா இட்லிதான் சூப்பர் ஸேல். அதே மாதிரி மெல்லிசா இருக்கிற பேப்பர் ரோஸ்ட்டுக்கு பேரு சிம்ரன். ராத்திரி பத்து மணிக்கு மேல் ஸ்பெஷல் அயிட்டம் மும்தாஜ் புரோட்டா.''

''டேய்... பேத்தாமே வாடா...!''

சில நிமிஷ நடையில் முனீஸ்வரன் கோயிலும் ஒர்க்ஷாப்பும் வர பக்கத்திலேயே ஒரு குடிசை. ஒர்க்ஷாப்பில் வெல்டிங் வேலை நடந்து கொண்டிருக்க ஒரு டாட்டா சுமோ எலும்புக் கூடாய் நின்றிருந்தது. விவேக்கையும் விஷ்ணுவையும் பார்த்ததும் வெல்டிங் வேலை நின்றது. காக்கி அரை ட்ராயர் நபர் எழுந்து வந்தான்.

''யார் வேணும் ஸார்.''

''ஆட்டோ டிரைவர் பூபாலன் வீடு இதுதானே?''

''ஆமா... ஸார்... நீங்க...?''

''போலீஸ்...''

''ஸ... ஸார்...'' காக்கி ட்ராயரின் குரலில் பவ்யம் தொற்றிக் கொண்டது. விவேக் கேட்டான்.

''பூபாலன் தற்கொலை பண்ணிக்கிட்ட விப்ரம் தெரியுமா...?''

''பேப்பர்ல பார்த்துதான் தெரிஞ்சுக்கிட்டேன் ஸார்.''

''பூபாலன்... ஆள் எப்படி...?''

''ஸார்...! பூபாலன் ஆறு மாசத்துக்கு முந்தி வரை ரொம்பவும் நல்ல டைப் ஸார். சிகரெட், தண்ணின்னு எந்த கெட்ட பழக்கமும் இல்லாமே டீஸண்டா இருந்தான். அதுக்கப்புறம் ஆளே மாறிட்டான்.''

''ஏன்...?''



''ஒரு பொண்ணை லவ் பண்ணி அதுல தோல்வி ஏற்பட்டதாகவும் சொல்றாங்க ஸார்...''

''பூபாலனுக்கு ஃபேமிலி கிடையாதா...?''

''கிடையாது ஸார்... ஒண்டிக்கட்டை.''

விவேக் பூபாலனின் குடிசைக் கதவை நெருங்கி அதில் பூட்டு என்கிற பெயரில் தொங்கிக் கொண்டிருந்த அலுமினிய தொத்தல் பூட்டை இழுத்துப் பார்த்தான். கொஞ்சம் முரண்டு பிடித்தது.

''விஷ்ணு...! இதைக் கொஞ்சம் கவனி...!''

விஷ்ணு சுற்றும் முற்றும் பார்த்து ஒரு தட்டையான கல்லை எடுத்துக் கொண்டு போய் பூட்டை மொத்தினான். அது கழன்று விழுந்தது.

உள்ளே போனார்கள். விவேக் தன் பென்டார்ச்சை உபயோகப்படுத்தி ஸ்விட்சைக் கண்டுபிடித்து தேய்க்க இரண்டடி ட்யூப்லைட் ஒன்று உயிர் பிடித்துக் கொண்டு வெளிச்சம் கொடுத்தது.

சிறிய அறை. சுத்தமாக இல்லை. அறையின் குறுக்கே ஓடிய ப்ளாஸ்டிக் கயிற்றில் லுங்கிகள், ஜட்டிகள் தொங்கிக் கொண்டிருந்தன. அறையின் மூலையில் ஒரு மர பீரோ தெரிய - விவேக் அதன் கைப்பிடியைப் பற்றி இழுத்தான். திறந்து கொண்டது.

உள்ளே துணிமணிகள். நிறைய புத்தகங்கள்.

எல்லாமே கவிதைப் புத்தகங்கள்.

அப்துல்ரகுமான், வைரமுத்து, சிற்பி, இன்குலாப், மனுஷ்யபுத்திரன். - இவர்களின் கவிதைப் புத்தகங்களுக்கு நடுவே அந்த நோட்டுப் புத்தகம் கிடைத்தது.

பிரித்தான் விவேக். முதல் பக்கத்தில் தலைப்பு.

ஸ்கெட்ச் பேனா அழகாக 'என்னவளுக்காக...' என்று எழுதியிருந்தது.

இரண்டாவது பக்கத்தில் ஒரு கவிதை.

கண்ணே!
24 மணி நேரமும் நீ
என் பக்கத்தில் இருக்க வேண்டிய
கட்டாயம் இப்போது
நேர்ந்துவிட்டது. நீ விடும்
மூச்சுக் காற்றுதான் எனக்கு
இனி பிராணவாயு.

விவேக் பக்கங்களைப் புரட்டிக் கொண்டே வந்தான். காதல் கவிதைகளுக்கு நடுவில் ஒரு காரசாரமான கவிதை.

போகி கொண்டாடும்
மக்களே...!
உங்களுக்குள் இருக்கும்
ஜாதி வெறிக்கு
என்று போகிப் பண்டிகை?
நீ இறந்தால் உன் ஜாதிவெறியும்
உன்னுடன் உடன்கட்டை
ஏறப்போவது இல்லை.

விவேக் இன்னும் சில பக்கங்களைப் புரட்டினான். 'ஏன்?' என்ற தலைப்பில் ஒரு கிண்டல் கவிதை.

இந்தியா உணவு உற்பத்தியில்
தன்னிறைவு.வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி.
பின் ஏன் வறுமைக் கோடும்
பட்டினிச் சாவும்?

நாட்டின் பாதுகாப்பு வலிமையாக
இருக்கிறது. ராணுவ மந்திரி
பெருமிதம்.
பின் ஏன் தீவிரவாதிகள்
பாராளுமன்றத்தைப்
பதம் பார்க்கிறார்கள்?

தகவல்தொழில்நுட்பத்துறையில்
புதிய அணுகு முறைகள்.
பிறகு ஏன்...
ஆல் லைன்ஸ் இன் திஸ் ரூட் ஆர் பிஸி?

விஷ்ணு கையில் ஒரு புத்தகத்தோடு விவேக்கை நெருங்கினான். ''பாஸ்''

''என்னடா...''

''இந்த புத்தகத்தை ஒரு நிமிஷம் பாருங்க...''

விவேக் வாங்கிப் பார்த்தான். புத்தகத்தின் தலைப்பு



கண்ணில் விழுந்தது.

'நீங்களும் ஆவிகளோடு பேசலாம்'

''என்னடா... இது... பூமாவோட டெலிபோன் பூத் மேஜைட்ராயரிலும் ஆவிகள் சம்பந்தப்பட்ட ஒரு புத்தகம் இருந்தது. இங்கேயும் ஒரு புத்தகம் இருக்கு.''

''பாஸ்! புத்தகத்தை எழுதினது யார்ன்னு பார்த்தீங்களா?''

விஷ்ணு சொன்னதும்தான் பெயரைக் கவனித்தான் விவேக். டாக்டர்.கோவர்த்தன ரெட்டி.

''டேய்... விஷ்ணு...! பூமாவோட கேஸ் இப்போ தள்ளுவண்டியில் விக்கிற பேல்பூரி மாதிரி ஆயிடுச்சு... இந்த கேஸ்ல நாம எந்த இடத்துல இருக்கோம்ன்னே தெரியலை...''

''பாஸ்! டாக்டர். கோவர்த்தன ரெட்டிக்கும் இந்த கேஸுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கு... அவரைக் கொஞ்சம் உரசினா என்ன...?''

''நேர்ல போய் அவரைப் பார்த்துடலாமா?''

''இப்பவே...''

## 7

கோவர்த்தன ரெட்டி முடி கொட்டிவிட்ட மொசைக் மண்டையோடு கொஞ்சம் நாகேஸ்வரராவ் ஜாடையில் இருந்தார். கிட்டத்தட்ட அறுபது வயது. சைனஸ் ப்ராப்ளத்தின் காரணமாக கையில் வைத்திருந்த இன்ஹேலரால் ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தடவை மூக்கை உறிஞ்சிக் கொண்டார்.

விவேக்கையும் விஷ்ணுவையும் தன் பிரத்யேக அறையில் உட்கார்த்தி வைத்துக் கொண்டு ''எஸ்... வாட் கேன் ஐ டு ஃபார் யூ'' என்றார்.

''பூமாவை உங்களுக்குத் தெரியுமா டாக்டர்...?''

''நல்லாவே தெரியும். அழகான அந்தப் பெண்ணுக்கு அப்படி ஒரு கோர முடிவு ஏற்பட்டிருக்க வேண்டாம். ஒரு லாரியோட 'ரேஷ் டிரைவிங்' காரணமாக பூமாவோட வாழ்க்கை அரையும் குறையுமா முடிஞ்சுப் போச்சு...''

''டாக்டர்...! பேப்பர் நியூஸ்படி பூமா இறந்து போனது விபத்துல. பட்... அது ஒரு திட்டமிட்ட கொலை...''

''என்னது... கொலையா...?'' ரெட்டியின் முன்மண்

டையில் இப்போது வியர்வை.

''எஸ்...! டெலிபோன் பூத் மேல் லாரி மோதுவதற்கு கொஞ்ச நேரம் முன்புதான் பூமா எனக்கு போன் பண்ணினாள். என்கிட்ட ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்ன்னு சொன்னாள். நான் ஸ்பாட்டுக்கு வர்றதுக்குள்ளே ஒரு லாரி டெலிபோன் பூத் மேல் மோதி அவளோட வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியை வெச்சுடுச்சு.''

''அந்த லாரியை போலீஸ் இன்னமும் கண்டுபிடிக்கலையா...?''

''கண்டுபிடிக்க முடியலை... நள்ளிரவு நேரத்தில் நடந்த சம்பவம். லாரி எப்படியோ எஸ்கேப் ஆகி சிட்டிக்குள்ளேயே பதுங்கிடுச்சு... பை...த.., பை டாக்டர்...! பூமா உங்களுக்கு எந்த வகையில் பழக்கம்...?''

''பூமாவோட சிஸ்டர் ஜோதி கிட்டத்தட்ட என்னோட பேஷண்ட் மாதிரி...''

''ஜோதிக்கு என்ன உடம்பு...?''

''பிஸிக்கலி ஷி ஈஸ்... ஓ.கே... பட் மெண்ட்டலி ஷி ஈஸ் நாட் நார்மல்... ஏதோ ஒரு ஸ்பிரிட் ஜோதியை அட்டாக் பண்ணியிருக்கு...''

''ஸ்பிரிட்ன்னு நீங்க சொல்றது ஆவிதானே?''

''எஸ்..!''

''டாக்டர்...! நீங்கள் தமிழ்நாட்டிலேயே புகழ்பெற்ற கார்டியாலாஜிஸ்ட். ஆவிகளை நீங்க நம்பறதும், ஒருத்தரை அந்த ஆவி பிடிச்சு இருக்கிறதா சொல்றதும் நம்பும்படியா இல்லையே...!''

கோவர்த்தன ரெட்டி சிரித்தார். ''ஆவிகள் இருக்குன்னு சொல்றதை நீங்க மூடநம்பிக்கையா நினைக்கறீங்களா...?''

''ஆமா...''

''உங்களுக்கு அது மூடநம்பிக்கை. எனக்கு அது நம்பிக்கை... நம்ம உடம்புக்குள்ளே உயிர்ன்னு ஒண்ணு இருக்கு. அதை ஒத்துக்கறீங்களா இல்லையா...?''

''அதை ஒத்துக்கத்தானே வேணும்...!''

''உயிர்ன்னு ஒண்ணு இருக்கிறதை நீங்க ஒத்துக்கும்போது உடம்பைவிட்டு அந்த உயிர் போகும்போது அதே உயிர் ஏன் ஆவியாக இருக்கக் கூடாது...''

''ஸாரி டாக்டர்... நீங்க சொல்றதை ஜீரணிக்க கஷ்டமாயிருக்கு...!''



''எனக்கும் ஆரம்பத்தில் நீங்க சொல்ற அஜீர்ணம் இருந்தது. பட் நான் ஒரு மெடிக்கல் செமினார்க்காக லண்டன் போயிருந்த போது ப்ராங்பர்ட் என்கிற டாக்டர் ஒருவரை சந்திக்க நேர்ந்தது. அவர் நம்பர் ஒன் நியூராலாஜிஸ்ட். எவ்வளவு சிக்கலான ஆப்ரேஷனாக இருந்தாலும் அதை நூறு சதவீதம் வெற்றிகரமாய் செய்யக்கூடியவர். அவரோடு நான் பேசிட்டிருந்தபோது அவர் கையில் ஒரு தடிமனான புத்தகம் இருந்ததைப் பார்த்தேன். அந்த புத்தகத்தோட தலைப்பு 'ஸ்பிரிட் சர்வீஸ்...' தமிழில் அந்த தலைப்பைச் சொல்றதாக இருந்தால் 'ஆவிகளின் பணி'. நான் அவர் கையில் இருந்த அந்த புத்தகத்தைப் பாத்துவிட்டு 'என்ன டாக்டர்! ஆப்ரேஷன் இல்லாத நாட்களில் பேய் ஓட்டுகிற வேலையையும் பார்க்கறீங்க போலிருக்கு'ன்னு சொன்னேன். அதுக்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா மிஸ்டர் விவேக்...?''

''சொல்லுங்க டாக்டர்...''

'' 'இன்னிக்கு இருக்கிற நிலவரப்படி லண்டனில் நான்தான் நம்பர் ஒன் நியூராலஜிஸ்ட். இந்த நம்பர் ஒன் ஸ்தானம் எனக்கு கிடைக்கக் காரணம் நான் படிச்ச படிப்பு ஒரு ஐம்பது பர்ஸண்ட்ன்னா பாக்கி ஐம்பது பர்ஸன்ட் ஆவிகளின் பணி. ஆவிகளின் உதவி மட்டும் இல்லைன்னா நான் இந்த அளவுக்கு நியூரோ சர்ஜரியில் பெயர் வாங்கியிருக்க முடியாது'ன்னு சொன்னார். நான் கேலியாய் அவர்கிட்டே 'ஆவிகள் உங்களுக்கு எப்படி உதவி செய்யுது'ன்னு கேட்டேன். அதுக்கு அவர் 'இந்த புத்தகத்தைப் படிச்சுட்டு அப்புறமா அந்தக் கேள்வியைக் கேளுங்க'ன்னு சொன்னார். நான் சுவாரஸ்யம் இல்லாமல் பொழுது போக புத்தகத்தைப் படித்து வைக்கலாம் என்கிற எண்ணத்தோடு ஓட்டல் அறைக்குப் போனேன். அன்னிக்கு ராத்திரியே டின்னர் சாப்ட்டுட்டு அந்த புத்தகத்தைப் படிக்க ஆரம்பிச்சேன். அந்தப் புத்தகத்தைப் படிக்க படிக்க எனக்குள்ளே சில இனம் புரியாத உணர்வுகள். அதை வார்த்தைகளாலே விவரிக்க முடியாது. அந்தப் புத்தகத்தை நான் முழுசா படிச்சு முடிச்ச போது விடியற்காலை நாலுமணி. ஆவிகளைப் பற்றிய கேலியான எண்ணங்கள் அந்த நிமிஷத்திலிருந்தே காணாமே போயிடுச்சு... காலையில் ஆறு மணிக்கு ப்ராங்பர்ட் எனக்கு போன் பண்ணினார். 'அனுபவம் எப்படி'ன்னு

கேட்டார். 'அற்புதம்'ன்னு சொன்னேன். 'என்னோட வீட்டுக்கு வாங்க... இன்னும் அற்புதங்களை பார்க்கலாம்'ன்னு சொன்னார். போனேன். உண்மையிலேயே அற்புதங்களைக் காட்டினார். ப்ராங்பர்ட்டின் மனைவி ஒலிவியா ஒரு மீடியமாக இருந்து தன்னுடைய கணவர்க்கு உதவுகிறார். இறந்துபோன பிரபல டாக்டர்களின் ஆவிகளை ஒலிவியாவின் உடலுக்குள் வரவழைத்து அந்த டாக்டர்களின் சிகிச்சை முறைகளை ப்ராங்பர்ட் கேட்டறிந்து அதன்படியே பேஷண்ட்களுக்கு ட்ரீட்மெண்ட் கொடுப்பதினால்தான் இன்றைக்கும் லண்டனில் நம்பர் ஒன் நியூராலஜிஸ்ட் சர்ஜனாக ப்ராங்பர்ட் விளங்குகிறார். அவர் அங்கே கையாள்கிற அதே முறையைத்தான் நானும் இங்கே கையாள்கிறேன்.''

''நீங்களும் இறந்துபோன பிரபல டாக்டர்களின் ஆவிகளை வரவழைத்துப் பேசுகிறீர்களா டாக்டர்...?'' விவேக் கேட்டான்.

''ஆமாம்...''

''உங்களுக்கு மீடியம் யார்...?''

''என் மகள் சோபிகா...''

சோபிகா கண்ணில் படுகிறாளாவென்று விஷ்ணு சுற்றும் முற்றும் பார்க்க ரெட்டி சிரித்தார்.

''அவள் வீட்டில் இல்லை. சிநேகிதியைப் பார்த்துவர தாம்பரம் வரைக்கும் போயிருக்கிறாள்.''

''ஓ.கே. டாக்டர்...!'' விவேக் தன் இரண்டு முழங்கைகளையும் மேஜையின் மேல் ஊன்றிக் கொண்டான். ''ஜோதியை ஏதோ ஒரு ஆவி பிடித்து இருப்பதாக நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் சைக்யாட்ரிஸ்ட் வசீகர் ஜோதி மெண்ட்டலி டிஸ்டர்ப்ட் என்று சொல்கிறார். இந்த இரண்டில் எது சரி...?''

''ஜோதி மெண்ட்டலி டிஸ்டர்ப்டாக இருப்பதற்கு காரணமே அவளை ஒரு துஷ்ட ஆவி பிடித்து இருப்பதுதான்.''

''அது எப்போது சரியாகும்...?''

''அந்த துஷ்ட ஆவிகிட்டே பேசிப் பார்க்கணும்.''

விஷ்ணு குறுக்கிட்டு கேட்டான். ''அந்த துஷ்ட ஆவி இன்னமும் உங்களுக்கு அப்பாய்ண்ட்மெண்ட் தரலையா டாக்டர்?''

ரெட்டி சிரித்தார். ''உங்க கேலி புரியுது. இந்த கேலியை எல்லாம் நான் பொருட்படுத்தறதே இல்லை. ஜோதியை



பூமா ரெண்டு தடவை என்கிட்டே கூட்டிட்டு வந்து காட்டினாள். அவளை ஒரு துஷ்ட ஆவி ஆக்ரமிப்பு பண்ணியிருக்கிறதை என் உள்ளுணர்வால் புரிஞ்சுக்கிட்டேன். இதை சைக்யாட்ரிஸ்ட் வசீகர்கிட்டே சொன்ன போது அவரும் உங்களை மாதிரிதான் சிரிச்சார். கேலி பண்ணினார். ஜோதியை உங்க மருந்தால குணப்படுத்த முடியாதுன்னு நான் சொன்னேன்.''

''ஜோதியைக் குணப்படுத்த நீங்க முயற்சி பண்ணீங்களா...?''

''வர்ற பௌர்ணமிக்கு ஜோதியை இங்கே கூட்டிட்டு வரும்படியா பூமாகிட்டே சொல்லியிருந்தேன். அதுக்குள்ளே இப்படி ஒரு சம்பவம்...''

''ஆட்டோ டிரைவர் பூபாலன் உங்களைப் பார்க்க வர்றதுண்டா டாக்டர்...?''

''அப்படி யாரையும் எனக்குத் தெரியாது.''

''நீங்க எழுதின புத்தகம் அவனோட ரூம்ல இருந்ததே...?''

''என்னோட ஆவி ஆராய்ச்சி புத்தகங்கள் ஆயிரக்கணக்குல விற்பனையாயிட்டிருக்கு... அந்தப் புத்தகங்களை வாங்கறவங்க எல்லோரும் என்னை வந்து பார்க்கணும்ங்கிற அவசியம் இல்லையே!''

''டாக்டர்...! பூமாவும் ஆட்டோ டிரைவர் பூபாலனும் காதலர்களாக இருந்திருக்காங்க... போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்படி பூமா ரெண்டு மாச கர்ப்பம். இப்போ பூமாவும் உயிரோடு இல்லை. பூபாலனும் உயிரோடு இல்லை. பூமா என்கிட்டே ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தை சொல்ல விரும்பியிருக்கா...! அதுக்கப்புறம் அவ மனசை மாத்திக்கிட்டு சொல்லாமே இருந்துட்டா. அவ சொல்ல நினைச்ச விஷயம் எது...? அவளைக் கொலை செய்ய யார் காரணம்...? எது காரணம்...? இதையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயத்தில் நாங்க இருக்கோம் டாக்டர். ஸோ உங்க ஒத்துழைப்பு எங்களுக்கு வேண்டும்.''

''போலீஸுக்கு உதவ எப்பவுமே நான் தயார். என்கிட்டயிருந்து எது மாதிரியான உதவியை எதிர்பார்க்கறீங்க...?''

''பூமா உங்களை எப்போ கடைசியாய் பார்க்க வந்தா...?''

''போனவாரத்துல ஒருநாள். அது எந்த நாள்ன்னு சரியா ஞாபகம் இல்லை. ஒரு நிமிஷம் இருங்க. டைரியைப் பார்த்துச் சொல்றேன்.'' டாக்டர் கோவர்த்தன ரெட்டி தன்னுடைய மேஜை இழுப்பறையைத் திறந்து டைரியைத் தேடிக் கொண்டிருக்கும்போதே விவேக்கின் பாக்கெட்டில் இடம்பிடித்து இருந்த செல்போன் முனகியது.

விவேக் எடுத்தான்.

''எஸ்...''

''ஸார்... நான் இன்ஸ்பெக்டர் முரளி கிருஷ்ணன்.''

''சொல்லுங்க முரளி.''

''ஸார்...! நீங்க உடனே புறப்பட்டு ஸ்பீட் ரெக்கவரி ஹாஸ்பிட்டலுக்கு வரமுடியுமா...?''

''என்ன... விஷயம்...?''

''அந்த ஹாஸ்பிட்டல்ல ட்ரீட்மெண்ட்டுக்காக அட்மிட் பண்ணியிருந்த ஜோதியைக்....''

''ஜோதியை...?''

''காணோம் ஸார்...''

# 8

விவேக்கும் விஷ்ணுவும் டாக்டர் கோவர்த்தன ரெட்டியிடம் விடைபெற்றுக் கொண்டு அவசர அவசரமாய் ஸ்பீட் ரெகவரி ஹாஸ்பிட்டல் போய்ச் சேர்ந்தபோது இன்ஸ்பெக்டர் முரளி கிருஷ்ணனும் ஹாஸ்பிட்டலின் டாக்டர் விஜயசாரதியும் இருண்டுபோன முகங்களோடு பார்வைக்குக் கிடைத்தார்கள்.

விவேக் கேட்டான்.

''எப்படி டாக்டர்... எப்படி ஜோதி காணாமல் போனாள்...?''

''அதுதான் எங்களுக்கும் ஒரு பெரிய குழப்பமாயிருக்கு மிஸ்டர் விவேக். அரைமணி நேரத்துக்கு முந்தி இன்ஸ்பெக்டர் முரளி கிருஷ்ணன் ஜோதியோட உடல்நிலையைப்பத்தி தெரிஞ்சுக்கிறதுக்காக என்கிட்ட வந்தார். நானும் அவரும் ஜோதியைப் பார்க்கிறதுக்காக அவ அட்மிட்டாகியிருந்த ரூமுக்கு வந்தோம். அவ கான்ஷியஸ் திரும்பாமே அதே கோலத்தில் உணர்வில்லாமல் கிடந்தாள். ஒரு அஞ்சு நிமிஷம் அந்த ரூம்ல இருந்துட்டு மறுபடியும் நானும் இன்ஸ்பெக்டரும் என்னுடைய



அறைக்கு வந்தோம். காபி சாப்பிட்டுக்கிட்டே பூமாவோட மரணத்தைப்பத்தி பேசிட்டிருந்தோம். நர்ஸ் பார்வதி ஓடி வந்தாங்க. ஜோதியை பெட்ல காணோம்ன்னு சொன்னதுமே எங்களுக்கு தூக்கி வாரிப் போட்டது. ரூமுக்குப் போய்ப் பார்த்தோம். அறை கொஞ்சம் அலங்கோலமாய் இருந்தது. போர்வை கட்டிலுக்குக் கீழே போயிருக்க - குளுகோஸ் பாட்டிலும் ட்ரிப்ஸ் போடறதுக்காக உபயோகப்படுத்தப்பட்ட ஸ்டாண்டும் சுவர் மூலையில் உடைஞ்ச நிலையில் கிடந்தது. ஹாஸ்பிட்டல் பூராவும் தேடிப் பார்த்துட்டோம். ஜோதி கிடைக்கலை.''

''ஜோதியைப் பார்த்துகிட்ட நர்ஸ் யாரு?''

''பார்வதி...! அதோ... அவங்கதான்...'' டாக்டர் விஜயசாரதி அந்த நடுத்தர வயதுப் பெண்ணைக் கைகாட்ட விவேக்கின் பார்வை பார்வதியின் மேல் நிலைத்தது.

''நீங்க... சொல்லுங்க சிஸ்டர்... என்ன நடந்தது?''

''எனக்கு காலையில் இருந்தே வயிறு சரியில்லாமே இருந்தது ஸார்... அடிக்கடி டாய்லெட்டுக்கு போய்ட்டு வந்துட்டிருந்தேன். ஒரு மணி நேரத்துக்கு முந்தி எனக்கு ரொம்பவும் டயர்டா இருந்ததால ரெஸ்ட் ரூமுக்குப் போய் ஒரு அரைமணி நேரம் படுத்துட்டு வந்தேன். வந்து பார்த்தபோது ஜோதி பெட்ல இல்லை. வேற எதாவது பெட்டுக்கு மாத்தியிருப்பாங்களோன்னு நினைச்சு மத்த நர்ஸ்ங்ககிட்டே விசாரிச்சுப் பார்த்தேன். அப்படியில்லைன்னு தெரிஞ்சதுமே டாக்டர்கிட்டே ஓடி வந்து விஷயத்தைச் சொன்னேன்...!''

விவேக் லேசாய் கோபப்பட்டான்.

''ஜோதியைப் பார்த்துக்க வேண்டியது உன்னுடைய ட்யூட்டி! அப்படி உனக்கு உடம்பு சரியில்லைன்னா டாக்டர்கிட்ட சொல்லி வேற ஒரு நர்ஸை அந்த ட்யூட்டிக்கு போட்டிருக்கலாமே... பேஷண்ட்டை தனியா விட்டுட்டு நீ எப்படி ரெஸ்ட் எடுக்கப் போகலாம்...?''

''ஸார்... அது வந்து... ஜோதியை பக்கத்துல இருந்து பார்த்துக்க வேண்டிய அவசியம் இல்லாத ஒரு பேஷண்ட். கிட்டத்தட்ட கோமா ஸ்டேஜ். அதனால்தான் நான் யார்கிட்டேயும் சொல்லாமே ரெஸ்ட் எடுக்கப் போனேன்.''

டாக்டர் விஜயசாரதி விவேக்கை ஏறிட்டார்.

''மிஸ்டர் விவேக்...! ஜோதியை யாராவது கடத்திக் கிட்டு போயிருப்பாங்கன்னு நான் நினைக்கலை. காரணம் ஜோதி கடத்தப்பட்டிருந்தா அவளை ஒரு ஸ்ட்ரெச்சர்ல வெச்சுத்தான் தள்ளிட்டு போயிருக்கணும்... அந்நியர்கள் யாராவது ஸ்ட்ரெச்சரை உபயோகப்படுத்தி யிருந்தா இந்த ஹாஸ்பிட்டல் ஊழியர்களுக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்கும்... என்னோட அஸ்ஸெம்ஷன்படி ஜோதிக்கு சுய உணர்வு வந்து இருக்கணும். சுய உணர்வு வந்ததுமே ஜோதி தன்னிச்சையா எழுந்து போயிருக் கணும்...''

''கிட்டத்தட்ட கோமாஸ்டேஜில் இருந்த ஜோதிக்கு திடீர்ன்னு சுய உணர்வு வர வாய்ப்பு இருக்கா டாக்டர்?''

''நிறையவே வாய்ப்பு இருக்கு... நாலு மணி நேரத் துக்கு ஒரு தடவை 'நியூரோ க்யூர்'ங்கிற ஒரு காஸ்ட்லி இஞ்செக்ஷனை ஜோதிக்கு போட்டுட்டு வந்தோம். இது சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மெடிசன். கோமாஸ்டேஜ் பேஷண்ட்களுக்கு இந்த இஞ்செக்ஷனை தொடர்ந்து போட்டுக்கிட்டு வந்தா... எந்த நிமிஷமும் அவங்களுக்கு சுய உணர்வு வரலாம். ஜோதிக்கு இப்படி சுய உணர்வு வந்துதான் வெளியே போயிருக்கணும். வழக் கமா இவ போகிற இடங்களுக்குப் போய் தேடிப் பார்த்தா ஜோதி கிடைக்கலாம்...''

விவேக் விஷ்ணுவிடம் திரும்பினான்.

''விஷ்ணு...!''

''பாஸ்...!''

''ஜோதி எங்கே போயிருப்பான்னு தேடற வேலை உனக்கு... இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளே உன்கிட் டேயிருந்து எனக்கு உருப்படியான ஒரு தகவல் கிடைக் கணும்...''

''முடிஞ்சா ஜோதியையே உங்க முன்னாடி கொண்டு வந்து நிறுத்தறேன் பாஸ்.''

''கிளம்பு...!''

விஷ்ணு கிளம்பிப் போய்விட விவேக் இன்ஸ்பெக்டர் முரளிகிருஷ்ணனை ஏறிட்டான்.

''மிஸ்டர் முரளி... ஜோதியோட ட்ரீட்மெண்ட் முடி கிற வரைக்குமாவது ஒரு கான்ஸ்டபிளை செக்யூரிடியா ரூம் வாசல்ல போட்டு இருக்கணும்... எப்படி மிஸ் பண்ணிங்க...?''

''ஸாரி... ஸார்...! பூமாவோட கேஸ்ல கொஞ்சம் அதி



கப்படியா இன்வால்வ் ஆயிட்டேன்... இப்படியொரு சம்பவம் நடக்கும்ன்னு எதிர்பார்க்கலை.''

''ஒரு போலீஸ் மேன் ஸாரி சொல்லக்கூடாது. பூமா வோட மரணம் பேப்பர் நியூஸைப் பொறுத்த வரைக்கும் ஒரு லாரி மோதி விபத்து. ஆனா நம்மைப் பொறுத்தவ ரைக்கும் அது மர்டர். கொஞ்சம் கவனமா டீல் பண்ணியி ருக்கணும்... இட்ஸ்... ஓ.கே... இனி அதைப்பத்தி பேசி பிரயோஜனம் இல்லை... ஜோதி கைக்கு கிடைச்சாத்தான் பூமாவோட மரணத்துக்கு காரணம் யார்ன்னு தெரியும்.''

விவேக் பேசிக்கொண்டே மறுபடியும் டாக்டர் விஜய சாரதியின் அறைக்கு வந்து சில நிமிஷங்கள் மற்ற ஹாஸ்பிட்டல் ஊழியர்களிடம் விசாரணை செய்துவிட்டு புறப்பட்டான். காரை நோக்கி நடந்து கொண்டிருந்த போது செல்போன் அழைத்தது.

எடுத்தான். காதில் விஷ்ணுவின் குரல்.

''பாஸ்... நான்தான்...!''

''என்னடா...?''

''ஜோதியைப் பத்தி ஒரு தகவல் கிடைச்சிருக்கு.''

''சொல்லு...''

''ஜோதி ஹாஸ்பிட்டலிலிருந்து வெளியே வந்து ஒரு மாருதி காரில் ஏறிப் போயிருக்கா...!''

''கில்லாடிடா நீ...! தகவல் எப்படி கிடைச்சது?''

''ஒரு ஆட்டோ டிரைவர் பார்த்திருக்கான். டிரைவர் பேர் கல்யாணம். நான் ஹாஸ்பிட்டலைவிட்டு வெளியே வந்ததும் நேர் எதிரே ஆட்டோஸ்டாண்ட்தான் இருந்தது. ஜோதி வெளியே வந்திருந்தா சவாரியை எதிர்பார்த்து காத்திட்டிருக்கிற ஆட்டோ டிரைவர்களின் பார்வையில் கண்டிப்பாய் பட்டிருப்பாங்கிற கோணத்தில் திங்க் பண்ணிப் பார்த்தேன். பட்டும்படாமே விசாரிச்சு பார்த்த போது ஜோதி ஒரு மாருதி காரில் ஏறிப்போன விஷயம் தெரிஞ்சது...''

''ஆட்டோ டிரைவர் கல்யாணம் அந்த மாருதி கார் நெம்பரை நோட் பண்ணலையா...?''

''கார் நெம்பரை நோட் பண்ணலை... பாஸ்...! ஆனா காரின் பின் பக்க கண்ணாடியில் ஒரு ஸ்டிக்கர் வாசகம் ஒட்டியிருந்ததாம். கொஞ்சம் நீளமான வாசகம்.''

''என்ன வாசகம் சொல்லு...!''

''இந்தியாவுக்குள் வாழ்பவன் இந்தியன் அல்ல. எவன் மனசுக்குள் இந்தியா வாழ்கிறதோ அவனே இந்தியன்.''

''இந்த க்ளு போதுமே...! கார்க்கு இதுமாதிரியான ஸ்டிக்கர் வாசகங்களை தயாரித்து தருகிற பத்து பதினைந்து கடைகள் பாரீஸ் கார்னரில் இருக்கு... போய் உரசிப்பாரு.......கிடைக்கலாம்...''

''எஸ்... பாஸ்...''

விவேக் செல்போனை அணைத்து சர்ட் பாக்கெட்டுக்குள் சொருகிக் கொண்ட விநாடி -

டூவீலர் பார்க்கிங்கிலிருந்து அந்த நடுத்தர வயது நபர் விவேக்கை நோக்கி வந்தார். அவரைப் பார்த்ததும் விவேக் புன்னகைத்தான்.

''வாங்க... ஹரிஹரன்...!''

ஹரிஹரன் க்ரைம் ப்ராஞ்சின் ஷேடோ ஸ்க்வாட் பிரிவின் ஒரு அதிகாரி. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பேச ஆரம்பித்தார்.

''ஸார்! பூமாவின் காதலன் பூபாலனின் மரணத்தைப் பத்தி நீங்க கெஸ் பண்ணினது சரிதான். நீங்க கொடுத்த இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்படி வேவு பார்த்ததில் சில ஆதாரங்கள் கிடைச்சிருக்கு...''

''எஸிட்...! கார்ல ஏறுங்க... ஹரிஹரன்! பேசிக்கிட்டே போலாம்...''

## 9

தினமல்லிகை பத்திரிக்கை அலுவலகத்துக்குள் கார் நுழைந்து ஃபோர்வீலர்ஸ் பார்க்கிங்கில் நின்றது.

விவேக்கும் ஹரிஹரனும் காரினின்றும் இறங்கி உள்ளே போக - வெளியே எங்கோ புறப்பட்டுப் போக தயாராக இருந்த ஆசிரியர் பைரவமூர்த்தி அவர்களைப் பார்த்ததும் மலர்ந்தார்.

''வாங்க... மிஸ்டர் விவேக்...!''

''வெளியே எங்கோ புறப்பட்டு போக ரெடியா இருக்கிங்க போலிருக்கு...?''

''ஒரு மேரேஜ் ரிசப்ஷன்...''

''ஒரு பத்து நிமிஷம் உங்ககிட்ட பேசலாமா?''

''தாராளமா...! வாங்க... வாங்க...''

உள்ளே போனார்கள்.

ஆசிரியர் பைரவமூர்த்தி தன்னுடைய அறைக்குள் நுழைந்து ஏ.ஸி.யை ஆன் செய்துவிட்டு நாற்காலிகளைக் காட்டினார்.



''ப்ளீஸ்...''

உட்கார்ந்தார்கள்.

பைரவமூர்த்தி கேட்டார்.

''பூமாவின் காதலன் டிரைவர் பூபாலனின் தற்கொலையில் ஏதாவது புது விஷயம் கிடைச்சிருக்கா... மிஸ்டர் விவேக்...?''

விவேக் புன்னகைத்தான்.

''கிடைக்கப்போய்த்தானே வந்திருக்கோம்.''

''சொல்லுங்க... என்ன அந்த புது விஷயம்...''

''ஒரு விஷயம் இல்லை... மூணு புது விஷயங்கள் கிடைச்சிருக்கு. முதல் விஷயம் பூமாவும் பூபாலனும் காதலர்களே கிடையாது. ரெண்டாவது விஷயம் பூமாவின் வயிற்றில் இருந்த இரண்டு மாத கருவுக்கு பூபாலன் காரணம் கிடையாது. மூணாவது விஷயம் பூபாலன் உங்க பத்திரிக்கை ஆபீஸுக்கு வந்து தற்கொலை பண்ணிக்கலை. அவனை இங்கே வலிய கொண்டு வந்து பாய்ஸன் கொடுத்து கொலை பண்ணியிருக்காங்க.''

பைரவமூர்த்தி முகம் வெளிறினார்.

''எ...எ...என்னது கொலையா...?''

''எஸ்... எஸ்...!''

''எ...எ...எப்படி...?''

''எப்படின்னு நீங்கதான் சொல்லணும்... ஏன்னா சம்பவம் உங்க பத்திரிக்கை ஆபீஸில்தானே நடந்திருக்கு...''

''அவன் தற்கொலைதான் பண்ணிகிட்டான் மிஸ்டர் விவேக்... பூபாலன் பாக்கெட்ல அவன் கைப்பட எழுதின தற்கொலைக்கடிதம் இருந்ததே...!''

''அது அவன் எழுதின கடிதம் கிடையாது. வேற யாரோ எழுதி அவனோட பாக்கெட்ல வெச்சிருக்காங்க... இதே மாதிரி 'என் பூமாவுக்கு புஷ்பாஞ்சலி' என்கிற தலைப்பில் எழுதப்பட்ட கவிதைகளும் அவன் எழுதினது கிடையாது... பூமாவும் பூபாலனும் காதலர்கள்ங்கிற விஷயத்தை யாரோ எஸ்டாப்ளிஷ் பண்றதுக்காக இப்படியெல்லாம் கிரியேட் பண்ணியிருக்காங்க...''

பைரவமூர்த்தி முகத்தில் இப்போது வெள்ளமாய் வியர்வை. இறுகிப்போன பார்வையோடு விவேக்கை

ஏறிட்டார்.

''அப்பமுன்னா... பூபாலன் இங்கே விளம்பரம் கொடுக்க வந்தது பொய்ன்னு சொல்றீங்களா...?''

''சர்வ நிச்சயமா பொய்தான்! நீங்க யாரையோ காப்பாத்தறதுக்காக இப்படியொரு டிராமாவை அரங்கேற்றம் பண்ணியிருக்கீங்க...!''

''நான் சொன்னது பொய்தான்னு சொல்றீங்க...?''

''ஆமா...''

''என்ன ஆதாரம்...?'' பைரவமூர்த்தி கோபமாய் கேட்க, விவேக் ஹரிஹரனைப் பார்த்தான். ஹரிஹரன், தான் கொண்டு போயிருந்த கைப்பையைப் பிரித்து அந்தக் காலியான குவார்ட்டர் விஸ்கி பாட்டிலை எடுத்து மேஜையின்மேல் வைத்தார்.

விவேக் பைரவமூர்த்திக்கு அந்தக் காலி பாட்டிலைக் காட்டியபடி கேட்டான்.

''இந்த பாட்டிலைத்தானே பூபாலன் தன்னோட பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து மடமடன்னு விஸ்கியை குடிச்சான்?''

''ஆ... ஆமா...!''

''பேண்ட் பாக்கெட்டிலிருந்து பூபாலன் பாட்டிலை எடுத்ததை நீங்க பார்த்தீங்க...?''

''பார்க்காமே எப்படி சொல்ல முடியும்...?''

''பேண்ட்டோட எந்த சைடு பாக்கெட்டிலிருந்து எடுத்தான்னு உங்களுக்கு ஞாபகம் இருக்கா...?''

''சரியா கவனிக்கலை... ஏதோ ஒருபக்க பாக்கெட்டிலிருந்து எடுத்தான்...''

விவேக் மறுபடியும் ஹரிஹரனைப் பார்க்க அவர் கொண்டு போயிருந்த பிளாஸ்டிக் பையைப் பிரித்து அந்த ப்ரௌன் கலர் பேண்ட்டை எடுத்தார்.

''பூபாலன் போட்டிருந்த பேண்ட் இதுதானே?''

''ஆமா...!''

விவேக் பேண்ட்டை அவரிடம் கொடுத்தான்.

''இந்த பேண்ட்டைக் கொஞ்சம் பாருங்க பைரவமூர்த்தி. இதுல சைடு பாக்கெட்ஸே கிடையாது. ஃப்ரண்ட் பாக்கெட்ஸ் மட்டும்தான் இருக்கு...''

''சரி... ஃப்ரண்ட் பாக்கெட்ஸிலிருந்து



எடுத்திருக்கலாமில்லையா...?''

''அப்படி எடுத்திருக்க முடியாதே...!''

''எப்படி சொல்றீங்க...?''

விவேக் அந்த பாட்டிலை எடுத்து பேண்ட் பாக்கெட்டுக்குள் நுழைக்க முயன்றான்.

அது உள்ளே போகவில்லை.

பைரவமூர்த்தியைப் பார்த்து விவேக் புன்னகைத்தான்.

''இந்த ஃப்ரண்ட் பாக்கெட்டுக்குள் பாட்டிலையே நுழைக்க முடியாதபோது பூபாலன் எப்படி பாட்டிலை வெளியே எடுத்திருப்பான்...?''

பைரவமூர்த்தியின் முகத்தில் இப்போது அதிகபட்ச வியர்வை. விவேக் தொடர்ந்தான்.

''பூபாலன் ஒரு குடிகாரன். சொந்தம்ன்னு சொல்லிக்க யாரும் இல்லாத அநாதை. பூமாவை ஒருதலைபட்சமாக காதலித்து வந்திருக்கான். இதை ஒரு காரணமா வெச்சு பூமாவும் அவனும் காதலர்கள் மாதிரி காட்ட முயற்சி பண்ணியிருக்கீங்க பைரவமூர்த்தி. இதெல்லாம் எதுக்காகன்னு தெரியலை... பூமாவின் வயிற்றில் இருந்த கருவை மரபணு சோதனை செய்து பார்த்ததுல அந்த கருவுக்குச் சொந்தமானவன் பூபாலன் இல்லைன்னு தெரிஞ்சுது. பூபாலனின் தற்கொலைக் கடிதத்தில் இருக்கிற கையெழுத்தும் அவனோட கையெழுத்து இல்லைன்னு க்ராஃபாலஜி துறை சொல்லிட்டாங்க... ஸோ... மிஸ்டர் பைரவமூர்த்தி! இனிமே எல்லா உண்மையும் உங்க வாயிலிருந்துதான் வெளியே வரணும்...! எந்த காரணத்தையும் சொல்லி தப்பிக்க முடியாது. எனக்கு தெரிய வேண்டிய உண்மைகள் இதுதான். பூமா எதுக்காக, யாரால கொலை செய்யப்பட்டா...? அவள் வயித்தில் இருந்த கருவுக்கு யார் காரணம்...? ஹாஸ்பிட்டலில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜோதி சுயஉணர்வுக்கு வந்ததும் யார்கிட்டேயும் சொல்லிக்காமே வெளியே வந்து ஒரு மாருதி கார்ல கிளம்பிப் போயிருக்கா. அந்த மாருதி கார்ல வந்தது யாரு...? ஜோதி இப்போ எங்கேயிருக்கா...?''

பைரவமூர்த்தி இரண்டு கைகளாலும் முக வியர்வையை வழித்துக் கொண்டு விவேக்கையே

பார்த்தார். மெல்லிய குரலில் சொன்னார்.

"நான் சொல்ற உண்மையை நீங்க நம்புவீங்களா மிஸ்டர் விவேக்...?"

"சொல்லுங்க...! நம்பறதா வேண்டாமான்னு பரிசீலனை பண்ணுவோம்..."

பைரவமூர்த்தி கம்மிய குரலில் சொன்னார்.

"பூமா... யாரு...? பூபாலன் யாரு...? எதுக்காக அவங்க கொலை செய்யப்படணும்...? இந்த கேள்விகளுக்கெல்லாம் உங்களுக்கு எப்படி பதில் தெரியாதோ அதே மாதிரிதான் எனக்கும் தெரியாது. நேத்துக் காலையில் ஒன்பது மணி சுமார்க்கு ரெண்டு பேர் என்னோட வீட்டுக்கு வந்தாங்க. வீட்ல நானும் என்னோட மனைவியும் மட்டுந்தான் இருந்தோம். வந்த ரெண்டு பேரும் கைகள்ல துப்பாக்கியை வெச்சுக்கிட்டு எங்களை மிரட்டினாங்க... என்னோட மனைவியை வீட்ல பணயக்கைதியா வெச்சுக்கிட்டு என்னை ஒருத்தன் பத்திரிகை ஆபீஸுக்குக் கூட்டிட்டு வந்தான். நாங்க சொல்றபடி நீ கேக்கலைன்னா உன்னோட மனைவி உயிரோடு இருக்கமாட்டாள்னு சொல்லி பூபாலனோட கொலையை எனக்கு முன்னாடியே அரங்கேற்றம் பண்ணினாங்க... பூபாலன் ஃபுல்லா குடிச்சிருந்தான். என்னால எதையும் தடுக்க முடியலை... அவங்க சொல்லிக் கொடுத்தபடி உங்களுக்கு போன் பண்ணினேன். வரவழைச்சேன். பூமாவுக்கு புஷ்பாஞ்சலி - கவிதை - இதெல்லாம் உங்கக்கிட்ட காட்டி அவங்க சொன்னபடியே பேசினேன். நடிச்சேன். அவங்க சொன்னபடி நான் நடக்காமே இருந்திருந்தா இந்நேரம் நானும் என்னோட மனைவியும் உயிரோடு இருந்திருக்க மாட்டோம்."

விவேக் பைரவமூர்த்தியையே பார்த்தான்.

"அப்படீன்னா பூமா, பூபாலன் கொலைகளுக்கு நீங்க காரணம் கிடையாது...!"

"ஒரு பர்செண்ட் கூட கிடையாது. அந்த பெயர்களையே இதுநாள் வரைக்கும் நான் கேள்விப்பட்டதில்லை...!"

"நம்பலாமா...?"

"மிஸ்டர் விவேக்...! நான் கடவுள் மேல் பக்தியும் பயமும் கொண்டவன்." சொன்னவர் தன்னுடைய



மேஜையின் இழுப்பறையைத் திறந்து திருப்பதி வெங்கடாசலபதியின் படத்தை எடுத்து வைத்தார். அதன்மேல் கைகளை வைத்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தார்.

"மிஸ்டர் விவேக்! கடவுள் சாட்சியா நான் இப்போ சொன்னதெல்லாம் உண்மை. எனக்கும் பூமா, பூபாலன் கொலைகளுக்கும் துளிகூட தொடர்பில்லை. அந்த கொலைகள் எதுக்காக, யாரால் நடத்தப்பட்டதுன்னும் தெரியாது. என்னையும் என்னோட மனைவியையும் மிரட்டிய அந்தப் பேர்வழிகளுக்கு பயந்துதான் உங்களுக்கு போன் பண்ணி இங்கே வரவழைச்சேன்."

"உங்களை மிரட்டிய அந்த ரெண்டு பேர் யார்ன்னு மறுபடியும் பார்த்தா அடையாளம் சொல்ல முடியுமா...?"

"கொஞ்சம் கஷ்டம்தான்...! ஏன்னா ரெண்டு பேருமே தங்களை அடையாளம் தெரியாத அளவுக்கு தாடியாலும் விக்காலும் உருமாற்றிக்கிட்டு வந்திருந்தாங்க... அந்த உருவ அமைப்புல மறுபடியும் வெளியே வருவாங்களான்னு சொல்ல முடியாது. ஆனா, என்னோட மனைவி ஒரு க்ளு கொடுத்தா...!"

"என்ன க்ளு...?"

"வீட்ல அவ பணயக் கைதியா இருந்தபோது அந்த மிரட்டல் பேர்வழிக்கு செல்போன் வந்தது. பேசியிருக்கான். அவன் செல்போனோடு ஒதுங்கிப்போய் ரகசியமாய் பேசினாலும் சில வார்த்தைகள் என் மனைவியின் காதுகளில் விழுந்திருக்கு... அதுல ஒரு வார்த்தை ரெட்டி."

"ரெட்டியா...?"

"ஆமா... என் மனைவி அப்படித்தான் சொன்னா...!"

"இதைத்தவிர வேற என்னென்ன வார்த்தைகளை உங்க மனைவி அப்ஸர்வ் பண்ணியிருக்காங்க..."

"ஆவி, ஆத்மா"

"அப்புறம்...?"

"அவ்வளவுதான்...!"

விவேக் எழுந்து கொண்டான்.

"மிஸ்டர் பைரவமூர்த்தி! இந்த உண்மைகளை நீங்க

முன்னாடியே சொல்லியிருக்கலாம்...''

''நான் சொல்லலாம்ன்னுதான் இருந்தேன்... என்னோட மனைவி ரொம்பவும் பயந்துட்டா...''

''இப்ப என்கிட்ட நீங்க சொன்ன விஷயங்கள் வெளியே யார்க்கும் தெரிய வேண்டாம்... பூமா இறந்தது விபத்து. பூபாலன் பத்திரிகை ஆபீஸுக்கு வந்து தற்கொலை பண்ணிக்கிட்டான் - இந்த ரெண்டு செய்தியும் பேப்பர்களில் உண்மையைப்போல் அடிபட்டுக் கொண்டிருக்கும்போதே போலீஸ் பின்பக்க வழியில் கொலையாளியை தேடிக்கிட்டு இருக்கும்.''

விவேக்கும் ஹரிஹரனும் வெளியே வந்து கார்க்குள் நுழைந்து கிளம்பினார்கள். ரோட்டுக்கு வந்ததும் ஹரிஹரன் கேட்டார்.

''ஸார்... பைரவமூர்த்தி சொன்னதெல்லாம் ஏன் பொய்யாய் இருக்கக்கூடாது...?''

''நோ... ஹரிஹரன்...! அவர் பொய் சொல்லலை. உண்மையைத்தான் சொல்லியிருக்கார். ஹி ஈஸ் ஹார்ம்லஸ்..''

''அந்த 'ரெட்டி' யார் ஸார்....?''

''கார்டியாலஜிஸ்ட் டாக்டர் கோவர்த்தன ரெட்டியாய் இருக்கலாம். ஆவி, ஆத்மா என்கிற வார்த்தைகள் அதை ஊர்ஜிதம் பண்ணுது. இப்ப அவர்கிட்டதான் போயிட்டிருக்கோம்...'' சொன்ன விவேக் காரை ரோட் டோரமாய் நிறுத்திக் கொண்டு செல்போனில் விஷ்ணுவைப் பிடித்தான்.

''விஷ்ணு... இப்போ எங்கே இருக்கே...?''

''பாரீஸ் கார்னர் ஸ்டிக்கர் கடையில் பாஸ்...''

''ஏதாவது தகவல்...?''

''பெரிய சைபர் பாஸ்...''

''சரி... அந்த வேலையைத் தற்காலிகமா ஒத்தி வெச்சுட்டு நீ உடனே டாக்டர் ரெட்டி வீட்டுக்கு வா...!''

''கோவர்த்தன ரெட்டி...?''

''எஸ்...''

''எதுக்கு பாஸ்...?''

''கேஸோட க்ளைமேக்ஸுக்கு வந்துட்டோம்...''

''எனக்குப் புரியலை பாஸ்...''



''ரெட்டி வீட்டுக்கு வா... புரியும்...!''

விவேக் செல்போனை அணைத்துவிட்டு காரைக் கிளப்பினான்.

சிரமமான ட்ராஃபிக் ஜாமில் சிக்கி முப்பது நிமிஷங்களை செலவழித்து டாக்டர் கோவர்த்தன ரெட்டியின் வீடு போய்ச் சேர்ந்தபோது வீட்டு வாசலில் போலீஸ் ஜீப்.

விவேக் காரைப் பார்த்ததும் பைக் அருகே நின்றிருந்த விஷ்ணு ஓடிவந்தான்.

''பாஸ்...!''

''என்னடா...?''

''பூமா... பூபாலன்... லிஸ்ட்ல இப்போ ரெட்டி.''

''எ... என்ன சொல்றே...!''

''சம்பவம் நடந்து அரை மணிநேரம்தான் ஆயிருக்கு...! திடீர்ன்னு ப்ளட் வாமிட். ஹாஸ்பிட்டல் கொண்டு போறதுக்கு முன்னாடியே இறந்துட்டாராம்.''

## 10

விவேக் காரினின்றும் இறங்கி ரெட்டியின் வீட்டுக்குள் நுழைய ஒரு கனத்த மௌனத்தின் பின்னணியில் போலீஸ் இயங்கிக் கொண்டிருந்தது. ரெட்டி படுக்கையில் ஒரு நேர்க்கோடு மாதிரி தெரிய - தலைமாட்டில் நின்று கொண்டு அவருடைய மகள் சோபிகா கர்ச்சீஃபை வாயில் பொத்தி விசும்பிக் கொண்டிருந்தாள்.

பீட் இன்ஸ்பெக்டர் விஜயகுமார் விவேக்கைப் பார்த்ததும் பக்கத்தில் வந்தார். சல்யூட் அடித்தவர் சொன்னார்.

''ஸார்...! நானே உங்களுக்கு தகவல் கொடுக்கலாம்ன்னு இருந்தேன்.''

''மரணம் எப்படி...? டாக்டர் வந்து பார்த்தாரா...?''

''பார்த்தார் ஸார்...!''

''என்ன ரிப்போர்ட்...?''

''பாய்ஸன் ஸிம்ப்டம்ஸ் இருக்கிறதாக சொன்னார். பி.எம். முடிஞ்சதும் குடல் பகுதியை லேபுக்கு அனுப்பி கன்ஃபாம் பண்ணணும் ஸார்...!''

''ரெட்டியோட டாட்டர் சோபிகாவை என்கொயர் பண்ணீங்களா...?''

''நாட் யெட் ஸார்...''

''ப்ளீஸ்... கால் ஹர்...''

சோபிகா சிவந்த கண்களில் தேங்கி நின்ற நீரோடு விவேக்கிற்கு எதிரே வந்து நின்றாள்.

''என்ன நடந்தது மிஸ் சோபிகா..?''

கையில் வைத்திருந்த கர்ச்சீஃபால் கண்ணீரை ஒற்றிக் கொண்டு சோபிகா மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தாள்.

''அப்பா ரீடிங் ரூமில் உட்கார்ந்து ஏதோ படிச்சுட்டிருந்தார். நான் ஹாலில் உட்கார்ந்து டீ.வி. பார்த்துக்கிட்டிருந்தேன். திடீர்ன்னு அப்பா குரல் கொடுத்து 'கொஞ்சம் தண்ணி கொண்டு வாம்மா'ன்னு சொன்னார். நான் தண்ணீர் பாட்டிலோடு ரீடிங் ரூமுக்கு போறதுக்கு முன்னாடி அவரே ஹாலுக்கு வந்துட்டார். அடி வயித்துல் கையை வெச்சுக்கிட்டே வந்து சோபாவில் உட்கார்ந்தார். நான் 'என்னப்பா பண்ணுது'ன்னு கேட்டேன். 'வயிறு வலிக்குதும்மா'ன்னு சொன்னவர், எதிர்பாராத விதமா வாமிட் பண்ணினார். ப்ளட் வாமிட். வாமிட் பண்ணினதுமே அன்கான்ஷியஸ் ஆயிட்டார். நான் டாக்டர்க்கு போன் பண்ணி அவர் வந்து பார்க்கிறதுக்குள்ளே அப்பா இறந்துட்டார்...'' சொல்லச் சொல்லவே சோபிகாவின் அழுகை உச்சத்துக்குப் போயிற்று. விவேக் சில விநாடிகள் அவளை அழவிட்டு, பின் கேட்டான்:

''ரெட்டி இதுக்கு முந்தி வயிற்று வலியால் அவதிப்பட்டிருக்காரா...?''

''இல்லை...''

''இன்னிக்கு அவர் என்னென்ன ஃபுட் சாப்பிட்டார்?''

யோசித்து யோசித்து சொன்னாள் சோபிகா. விவேக் விஷ்ணுவுக்கு கண்ணைக் காட்ட அவன் ஒரு பேப்பரில் குறித்துக் கொண்டான்.

விவேக் கேட்டான்.

''வழக்கமாக மாத்திரை ஏதாவது சாப்பிடுவாரா...?''

''அப்பாவுக்கு சுகர் இருக்கு. அதுக்காக டெய்லி மாத்திரை சாப்பிடுவார்...''



''அப்பாவோட ரீடிங் ரூமைப் பார்க்கணும்...''

''வாங்க...!''

சோபிகா கூட்டிக் கொண்டு போனாள். ஏர்க்கண்டிஷனர் ரீடிங் ரூமை ஐஸ் காற்றால் நிரப்பி வைத்திருந்தது. அறையின் நான்கு திசைகளிலும் பெரிய பெரிய கண்ணாடி பீரோக்கள், ஒவ்வொரு பீரோவும் நூற்றுக்கணக்கான காலிகோ பைண்ட் புத்தகங்களை கர்ப்பம் தாங்கியிருக்க அதில் பாதி புத்தகங்கள் ஆவி ஆராய்ச்சி சம்பந்தப்பட்டவை.

THE SPRITS.
AROUND THE SPRITS.
I AND YOU.
ONE MORE WORLD.

விவேக் புத்தகங்களை பார்வையால் மேய்ந்து கொண்டே சோபிகாவிடம் கேட்டான்.

''ஆவிகள் விஷயத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கா?''

''நிறையவே இருக்கு...''

''ரெட்டி ஆவிகளோடு பேசுவதற்கு நீங்கள்தான் மீடியமாக இருப்பதாக சொன்னார். உண்மையா...?''

''உண்மைதான்...!''

''ரெட்டி தினமும் ஆவிகளோடு பேசுவாரா...?''

''தினமும் பேசமாட்டார். சிக்கலான இருதய ஆபரேஷன்கள் இருக்கிற நாட்களில் வெளிநாட்டு டாக்டர்களின் ஆவிகளை என் மூலமா வரவழைத்து பேசுவார்...''

''இதெல்லாம் நம்பற மாதிரி இல்லையே...?''

''வெளியே இருந்து பார்க்கிறவர்களுக்கு அப்படித் தான் தோணும். அப்பா இவ்வளவு பெரிய கார்டியாலஜிஸ்ட்டாக, புகழ்பெற்ற சர்ஜனாக இருப்பதற்குக் காரணமே வெளிநாட்டு டாக்டர் ஆவிகள் கொடுக்கிற யோசனைகள்தான்...!''

''ரெட்டிக்கு வெரி க்ளோஸ் ஃப்ரண்ட்ஸ் யாரு...?''

''அப்பாவுக்கு ஃப்ரண்ட்ஸே கிடையாது.''

''ஜோதி, பூமா, பூபாலன் இவங்களை உங்களுக்குத்

தெரியுமா...?''

''தெரியாது...!''

''இந்த வீட்ல உங்களைத் தவிர வேற யாரெல்லாம் இருக்காங்க...?''

''சமையலையும் வீட்டு வேலையையும் செய்ய ஒரு வயசான அம்மா இருக்காங்க...''

விவேக் அந்த ரீடிங் அறையில் மேலும் ஒரு சில நிமிடங்கள் இருந்துவிட்டு வெளியே வந்தான். கான்ஸ்டபிள்களுக்கு இன்ஸ்ட்ரக்‌ஷன்ஸ் கொடுத்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரை நெருங்கினான்.

''விஜயகுமார்...!''

''ஸார்...''

''ரெட்டியின் பி.எம். ரிப்போர்ட் கிடைச்சதும் உடனே கொண்டு வாங்க...''

''எஸ்... ஸார்...!''

ஹரிஹரனை ஸ்பாட்டில் இருக்க வைத்துவிட்டு விவேக்கும் விஷ்ணுவும் கார்க்கு வந்தார்கள்.

''பாஸ்...! கேஸ் பேஜாரா போய்ட்டிருக்கு. அமாவாசை இருட்டுல ஏதோ காட்டுக்குள்ளே மாட்டிக்கிட்ட மாதிரி இருக்கு!''

''சீக்கிரமே வெளிச்சம் வரும்...''

''எப்படி பாஸ்...?''

விவேக் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து அந்தச் சிறிய ப்ளாஸ்டிக் டப்பாவை எடுத்தான்.

''இந்த டப்பாவைக் கொஞ்சம் திறந்து பார்ரா...''

விஷ்ணு குழப்பமாய் திறந்து பார்த்தான்.

உள்ளே கற்பூரவில்லை மாதிரி வெள்ளை நிறத்தில் சில மாத்திரைகள். அந்த மாத்திரைகளுக்கு நடுவே நான்கைந்து கட்டெறும்புகள் இறந்து கிடந்தன.

''என்ன பாஸ்... இது...?''

''இது டயாஃபீப்ரீ சர்க்கரை மாத்திரைகள். சுகர் பேஷண்ட்கள் காபி, டீயில் இதை மிக்ஸ் பண்ணிக்கு வாங்க... டாக்டர் ரெட்டியும் இந்த டயா ஃப்ரீ சுகர் மாத்திரைகளை யூஸ் பண்ணியிருக்கார். ஆனா இது விஷம் கலந்த சுகர் மாத்திரைகளாக இருக்கும்ன்னு



நினைக்கிறேன். சர்க்கரை மாத்திரையைச் சாப்பிட்டா எந்த எறும்பாவது சாகுமா என்ன...? பார்... ஏழெட்டு எறும்பு மல்லாந்து கிடக்கு...''

விஷ்ணுவின் விழிகள் விரிந்தன. ''இந்த டயா ஃப்ரீ டப்பாவை எங்கேயிருந்து எடுத்தீங்க பாஸ்...?''

''ரீடிங் ரூம்ல...!''

''நான் கவனிக்கவேயில்லை பாஸ்...!''

''நீ எப்படிடா கவனிப்பே...! சோபிகாவை லுக் விட்டுக்கிட்டு இருக்கவே உனக்கு நேரம் சரியா இருந்ததே...!''

''ஸாரி பாஸ்...! என்னால தவிர்க்க முடியலை. ரெட்டியின் ஆத்மா என்னை மன்னிக்காது...!''

''நீ மகாபாவிடா...! அப்பாவை இழந்துட்டு அழுதுட்டிருக்கிற பெண்ணை சைட் அடிக்க உனக்கு எப்படிடா மனசு வருது?''

''தப்புதான் பாஸ்... இந்த பாவத்தைப் போக்க கேஸ் முடிஞ்சதும் ஒரு மண்டலம் விரதம் இருந்து காசிக்கு போய்ட்டு வந்துடறேன்...!''

''நீயெல்லாம் காசி பக்கமே எட்டிப் பார்க்கக் கூடாது...! இந்த நிமிஷத்திலிருந்து உனக்கு ரெண்டு வேலை...''

''தெரியும் பாஸ்...!''

''என்னான்னு சொல்லு பார்க்கலாம்...''

''ஜோதி ஏறிப்போன மாருதி காரைக் கண்டுபிடிக்கணும்...''

''கரெக்ட்! இனி ஒண்ணு...!''

''இந்த டயா ஃப்ரீ மாத்திரைகளில் விஷம் இருக்கா இல்லையான்னு லேப்ல கொடுத்து தெரிஞ்சுக்கிட்டு விஷம் இருந்தா இந்த விஷ மாத்திரைகள் எப்படி ரெட்டியோட ரீடிங் ரூமுக்கு வந்ததுன்னு கண்டுபிடிக்கணும்...!''

''கரெக்ட்...! இந்த ரெண்டு வேலையையும் முடிக்க உனக்கு 48 மணி நேர அவகாசம். 49 ஆவது மணி நேரம் எனக்கு ரிசல்ட் வேணும். கொடுப்பியா...?''

''நான் அனுமார் மாதிரி பாஸ்... சொன்ன வேலையைக் கச்சிதமா முடிச்சுட்டு வருவேன்...''

''டேய்.... அனுமார் மாதிரின்னு சொல்லாதே. அவர் கட்டை பிரம்மச்சாரி...!''

''வட நாட்டுப் பக்கம் அவர்க்கு ரெண்டு ஒய்ஃப்ன்னு சொன்னாங்களே பாஸ்...?''

''அது விநாயகர்க்குடா...!''

''ஸாரி பாஸ்... கன்ஃப்யூஸ் பண்ணிக்கிட்டேன்!''

## 11

அதற்குப் பிறகு வந்த இரண்டாவது நாள் காலை விடிந்து கொண்டிருந்தபோது - தூங்கிக் கொண்டிருந்த விவேக்கை ரூபலா எழுப்பினாள்.

''என்னங்க...! உங்களைப் பார்க்கிறதுக்காக கோயமுத்தூரிலிருந்து ஒரு அம்மாவும் அவங்க மகனும் வந்திருக்காங்க. விஷயம் என்னான்னு கேட்டா பதில் இல்லை. உங்களைப் பார்க்கணுமாம்...''

விவேக் எழுந்து வாஷ்பேஷனில் முகம் கழுவிக் கொண்டு வரவேற்பறைக்குப் போனான்.

ஐம்பது வயதில் இரட்டை நாடி சரீரத்தில் ஒரு கிராமத்துப் பெண்ணும் இருபத்தைந்து வயதில் ஒல்லியாய் தூக்கிய பற்களோடு அந்த இளைஞனும் பவ்யமாய் எழுந்தார்கள்.

விவேக் கேட்டான்.

''யார்... நீங்க...? என்ன வேணும்...?''

அந்தப் பெண் கும்பிட்டுக் கொண்டே சொன்னாள்.

''அய்யா... நாங்க கோயமுத்தூர்க்குப் பக்கத்தில் இருக்கிற குனியமுத்தூரைச் சேர்ந்தவங்க. என் பேரு தனபாக்கியமுங்க. இவன் என் பையன் மாடசாமிங்க.''

''என்ன விஷயம்...?''

''எங்க ஊரு டாக்டர் இந்த லெட்டரை உங்கக்கிட்ட கொடுக்கச் சொன்னாங்க....'' அந்தப் பெண் ஒரு மஞ்சள் துணிப் பையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்தக் கடிதக் கவரை எடுத்து நீட்டினாள்.

விவேக் வாங்கிப் பிரித்தான்.

டாக்டர் சுந்தரேசன் என்பவர் தன் லெட்டர்பேடில் கிறுக்கலான எழுத்துக்களில் எழுதியிருந்தார்.



அன்புக்குரிய திரு.விவேக் அவர்களுக்கு,

வணக்கம். நான் டாக்டர் சுந்தரேசன். கோவைக்கு அருகில் உள்ள குனியமுத்தூரில் ஒரு சிறிய க்ளினிக் வைத்து நடத்தி வருகிறேன். இந்த லெட்டரைக் கொண்டு வரும் தனபாக்கியமும் அவளுடைய மகன் மாடசாமியும் குனியமுத்தூரைச் சேர்ந்தவர்கள். மாடசாமிக்கு அப்பா கிடையாது. ஒரு எழுத்துக்கூட படிக்கத் தெரியாத மாடசாமிக்கு வேலை - ஆடுகளை மேய்ப்பதுதான். விவசாய கூலி வேலைக்கும் போவதுண்டு. நேற்று காலை மாடசாமியை அவளுடைய அம்மா என்னிடம் கூட்டி வந்தாள். பையன் பிரமை பிடித்தவன்போல் இருக்கிறான். பெயர் சொல்லிக் கூப்பிட்டால் திரும்பிப் பார்ப்பதில்லை. மளிகை சாமான் கட்டி வந்த ஒரு இங்கிலீஷ் பேப்பர் வீட்டில் இருந்திருக்கிறது. அதை எடுத்து வாய்விட்டு படித்துக்கொண்டிருந்தானாம். மாடசாமியின் அம்மா இப்படி சொன்னதும் எனக்கு ஆச்சர்யம். பிரமை பிடித்த நிலையில் இருந்த மாடசாமியை சோதித்துப் பார்த்தேன். உடல் ஆரோக்கியம் சீராகவே இருந்தது. மனதளவில் மட்டும் ஏதோ பாதிப்பு இருப்பதாகத் தோன்றியது. எனக்குத் தெரிந்த சில சைக்கோ தெரபிகளை உபயோகப் படுத்தி அவனோடு பேசினேன். உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டதற்கு 'கோவர்த்தன ரெட்டி' என்று சொன்னான்.

'நான் ஒரு கார்டியாலாஜிஸ்ட் டாக்டர். சென்னையில் நாளைக்கு ஒருவர்க்கு நான் பைபாஸ் சர்ஜரி செய்ய வேண்டும்' என்று சொன்னான். டாக்டர் கோவர்த்தனரெட்டி இரண்டு நாட்களுக்கு முன் இறந்துபோன விஷயம் எனக்குத் தெரியும். அவர் ஆவிகள் பற்றி ஆராய்ச்சி செய்தவர் என்பதும் எனக்குத் தெரியும். தமிழில் ஒரு எழுத்துக்கூட் படிக்கத் தெரியாத மாடசாமி, நான் ஆங்கிலத்தில் பேசியபோது அவனும் நல்ல ஆங்கிலத்தில்

என்னுடன் பேசியது எனக்கு பெரிய பிரமிப்பை ஏற்படுத்தியது. சப்-கான்ஷியஸ் மைண்டில் இருக்கும் வரை நல்ல ஆங்கிலம் பேசிய மாடசாமி சாதாரண நிலைக்கு வந்ததும் பிரமை பிடித்தவன் போல் ஆகிவிட்டான். கோவர்த்தன ரெட்டி விஷம் தோய்ந்த டயா ஃப்ரீ சர்க்கரை மாத்திரைகளால் கொலை செய்யப்பட்ட விஷயத்தைப் பேப்பரில் பார்த்தேன். மாடசாமியின் மூலம் உங்களுக்கு ஏதாவ்து தகவல் கிடைக்கலாம் என்பதால் அவனை உங்களிடம் அனுப்பி வைத்துள்ளேன். அவனை ஒருநல்ல மனோதத்துவ டாக்டரிடம் கூட்டிப்போய் ட்ரீட்மெண்ட் எடுத்தால் உங்களுக்கும் உபயோகமான தக்வல்கள் கிடைக்கும். அவனும் பழைய மாடசாமியாக மாற வழி பிறக்கும்...

**இப்படிக்கு,**

**சுந்தரேசன்.**

கடிதத்தைப் படித்து முடித்த விவேக் மாடசாமியைப் பார்க்க அவன் அரண்டுபோன முகத்தோடு தெரிந்தான். விவேக்கை கும்பிட்டான்.

''அய்யா... எனக்கு பயம்மாயிருக்கு... என் பக்கத்துல யாரோ வந்து நின்னுக்கிட்டு ஏதோ பேசற மாதிரியே இருக்கு. என்னால தூங்க முடியலை... அப்படியே மீறி தூங்கினாலும் யாரோ தட்டி எழுப்பற மாதிரியிருக்கு...''

விவேக் குறுக்கிட்டு கேட்டான். ''உனக்குப் பக்கத்துல வந்து யாரோ நின்னுக்கிட்டு பேசற மாதிரி இருக்குன்னு சொல்றியே... என்ன பேசறாங்கன்னு சொல்ல முடியுமா...?''

''குழப்பமா இருக்கய்யா... உன்னோட பேரு மாடசாமி கிடையாது. ரெட்டி... கோவர்த்தன ரெட்டி. நீ ஒரு டாக்டர். இப்படி ஏதேதோ... பேச்சு... சில வார்த்தைகள் எனக்குப் புரியறதே இல்லை...''

''டாக்டர் கோவர்த்தன ரெட்டியை இதுக்கு முன்னாடி நீ பார்த்திருக்கியா...?''



''இல்லீங்கய்யா...!''

''சென்னைக்கு வந்திருக்கியா...?''

''இல்லீங்கய்யா...''

போர்டிகோவில் பைக் சத்தம் கேட்டது. விவேக் திரும்பிப் பார்க்க விஷ்ணு பைக்கை நிறுத்திவிட்டு வேகவேகமாய் உள்ளே வந்து கொண்டிருந்தான்.

''குட் மார்னிங் பாஸ்...!'' சொன்னவன் தனபாக்கியத்தையும் மாடசாமியையும் பார்த்துவிட்டு கேட்டான்.

''யார் பாஸ் இவங்க...?''

விவேக் விஷ்ணுவை உட்கார வைத்து அவனுடைய கையில் டாக்டர் சுந்தரேசனின் கடிதத்தைக் கொடுத்தான்.

''படி...!''

விஷ்ணு குழப்பமாய் கடிதம் வாங்கி படித்து விட்டு வெகுவாய் முகம் மாறினான்.

''என்ன பாஸ் இது...! தமிழ் படிக்கத் தெரியாத ஆடு மேய்க்கிற மாடசாமி... இங்கிலீஷில் பேசறதாவது...?''

''டாக்டர் சுந்தரேசனும், தனபாக்கியமும் கேட்டிருக்காங்களே...! இங்கிலீஷில் பேசறது மட்டும் இல்லை... டாக்டர் சுந்தரேசனோடு மெடிக்கல் சம்பந்தப்பட்ட வார்த்தைகளையும் மாடசாமி பேசியிருக்கான்... 'பைபாஸ் சர்ஜரி ஒண்ணு நாளைக்கு இருக்கு. அதை அட்டெண்ட் பண்ணணும்'ன்னு சொல்லியிருக்கான்...!''

''பாஸ்! ஒரு காரியம் பண்ணலாமா?''

''என்ன...?''

''மாடசாமியை கோவர்த்தன ரெட்டி வீட்டுக்கே கூட்டிட்டு போய் ரெட்டியோட டாட்டர் சோபிகாகிட்டே பேசவிட்டா என்ன...?''

''நானும் அதைப்பத்திதான் யோசனை பண்ணிட்டிருக்கேன்... சோபிகாவுக்கு போன் பண்ணி விஷயத்தை சொல்லு. எப்ப வரட்டும்ன்னு கேளு...!''

விஷ்ணு செல்போனை எடுத்துக் கொண்டு சோபிகாவின் வீட்டு டெலிபோன் எண்களைத் தட்டிவிட்டு காத்திருந்தான். அரை நிமிஷ நேரத்துக்குப் பிறகு சோபிகாவின் குரல் கேட்டது.

''ஹலோ...!''

''நான் விஷ்ணு...''

''எந்த விஷ்ணு...?''

விஷ்ணுவுக்கு கொஞ்சம் ஏமாற்றமாய் இருந்தது. 'அவளுடைய மனசுக்குள் ரெஜிஸ்டர் ஆக இன்னமும் கடுமையாய் உழைக்க வேண்டும் போலிருக்கிறதே...!'

''க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸர் மிஸ்டர் விவேக்குடன் மூணு நாளைக்கு முன்னாடி உங்க வீட்டுக்கு வந்திருந்தேனே...!''

''ஓ... நீங்களா... சொல்லுங்க...!''

''நீங்க இப்ப ஃப்ரீயா...?''

''என்ன மறுபடியும் விசாரணைக்காக வர்றீங்களா...?''

''விசாரணைக்குத்தான் வர்றோம். பட் உங்க அப்பாவோடு வர்றோம்...''

''அப்பாவா...?''

விஷ்ணு கோயமுத்தூர் மாடசாமியைப் பத்தி சொல்ல சோபிகா பதட்டமானாள்.

''விஷ்ணு! அந்த மாடசாமியை நான் உடனே பார்க்கணும்.''

''கூட்டிட்டு வர்றோம்.''

## 12

விவேக்கும் விஷ்ணுவும் மாடசாமியையும் தனபாக்கியத்தையும் அழைத்துக் கொண்டு ரெட்டி வீடு போய்ச் சேர்ந்த போது ஆச்சர்யப்பட்டார்கள்.

இருபதுக்கும் மேற்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் கேமராவும் கையுமாய் காத்திருந்தார்கள். விவேக் சோபிகாவை தனியே கூட்டிப் போய் கோபப்பட்டான்.

''பத்திரிக்கை நிருபர்களுக்கு நகவல் கொடுத்தது யாரு?''

''நான்தான்.''

''எதுக்காக கொடுத்தீங்க...?''



''என்னோட அப்பாவின் மரணத்துக்குக் காரணமான நபர் யார்ங்கிறதை மாடசாமி மூலமா இப்போ வெளியே கொண்டுட்டு வரப்போறேன்.''

''முடியுமா...?''

''கண்டிப்பா முடியும்... ஆவிகள் விஷயத்தில் உங்க போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு நம்பிக்கை இல்லாமே இருக்கலாம். பட் எனக்கு இருக்கு...! மொதல்ல மாட சாமி உடம்பில் இருக்கிற ஆத்மா என் அப்பாவோடதான்னு கண்டுபிடிக்கணும். அதுக்கு சின்னதா ஒரு பூஜை வெச்சா போதும்.''

சோபிகா சொன்ன கையோடு பூஜைக்கான ஆயத்தங்களையும் செய்ய ஆரம்பித்துவிட்டாள். குளித்துவிட்டு வந்த மாடசாமிக்கு தன் அப்பாவின் உடைகளையே அணியக் கொடுத்து நடு ஹாலில் உட்கார்த்தி வைத்தாள். இரும்பாலான பெரிய தீபத்தில் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றி வைத்தாள்.

விஷ்ணு விவேக்கின் காதைக் கடித்தான். ''என்ன பாஸ் இது... ஒரு நல்ல சைக்யாட்ரிஸ்ட் கிட்டே கொண்டு போக வேண்டிய கேஸை சோபிகா இப்படி பண்ணிட்டிருக்கா... போற நிலைமையைப் பார்த்தா நீங்களும் நானும் கூட பேண்ட் சட்டையையெல்லாம் உருவிப் போட்டுட்டு இடுப்பில் துண்டோடு பூஜையில் உட்கார்ந்துக்க வேண்டிய நிலைமை வரும் போலிருக்கே...!''

''இதுவும் ஒரு வகையான ட்ரீட்மெண்ட்தான்! சோபிகா என்ன செய்யறான்னு பார்க்கலாம்...!''

இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போதே சோபிகா 'ஓய்ஜா' போர்டோடு மாடசாமிக்கு முன்பாய் வந்து உட்கார்ந்தாள். சுற்றிலும் பத்திரிகை நிருபர்கள்.

ஹாலில் கனத்த நிசப்தம் நிலவிக் கொண்டிருக்க - சோபிகா கண்கள் மூடி உதடுகளை மெல்ல அசைத்து ஏதோ உச்சரித்துக் கொண்டிருந்தாள்.

தளர்வாய் பயமாய் உட்கார்ந்திருந்த மாடசாமியின் உடம்பு நிமிஷத்துக்கு நிமிஷம் விரைப்பேறி நிமிர்ந்து கொண்டிருந்தது.

கிட்டதட்ட இருபது நிமிஷம்.

சோபிகா கண்களைத் திறந்து மாடசாமியைப் பார்த்தாள். அவனுடைய முகம் இறுகியிருந்தது.

சோபிகா கூப்பிட்டாள்.

''மாடசாமி...!''

அவனிடமிருந்து எந்த பதிலும் இல்லை.

''அப்பா...!''

''ம்...'' என்றான் மாடசாமி.

''மாடசாமியோட உடம்புக்குள்ளே நீங்க இப்போ இருக்கீங்க... அது நீங்கதானான்னு எனக்கு எப்படி தெரியும்...? நான் உங்களை சில கேள்விகள் கேட்கலாமா...?''

''கேளு...'' இப்போது அச்சாய் ரெட்டியின் குரல்,

''ஒருத்தருடைய இதயத்துடிப்பு நிமிடத்துக்கு 60 முதல் 100 வரை இருந்தால் ஆரோக்கியம். 60 க்கு கீழே இறங்கினால் இதயத்தில் ஏற்படும் நோய்க்கு என்ன பெயர்?''

''ப்ராடி கார்டியா...''

''100 க்கு மேல் 250 க்குள் இருந்தால்...?''

''டாக்கி கார்டியா...,'' என்று சொன்ன மாடசாமி தொடர்ந்து அவனே சொன்னான். ''250 க்கு மேல் 350 க்குள் இருந்தால் ஃப்ளட்டர் நோய். 350 க்கு மேல் இருந்தால் ஃபைப்பிலேஷன்... நோய்.''

''ஹார்ட் அட்டாக்கிற்கு இன்னொரு பேர் என்ன?''

''அஸிஸ்டோலி.''

சோபியா சில விநாடிகள் மௌனித்து விட்டு ஆங்கிலத்தில் கேட்டாள்.

''வாட் ஈஸ் யுவர் பர்ப்பஸ் ஆஃப் கம்மிங்?''

மாடசாமி ரெட்டியின் குரலில் கண்களை மூடியபடியே நல்ல ஆங்கிலம் பேசினான்.

''ஐ பிலீவ் திஸ் ஈஸ் கோயிங் டு பி ஏ வொண்டர்புல் டே. ஐ ஹேவ் கம் ஃபார் சக்சஸ்ஃபுல்லி ஹேண்டில் ஆல் த ப்ராப்ளம்ஸ் ஆஃப் பூமா... பூபாலன்...! டிஸ்கஸ் ஆர் நாட் கோயிங் டு ஃபால் அபார்ட்.''



விஷ்ணு விவேக்கின் காதருகே குனிந்தான்.

''பாஸ்...! ஆவிகளை இனிமே நாம கிண்டல் பண்ண முடியாது.''

சோபிகா இப்போது கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அப்பா...! உங்களுடைய மரணத்துக்கு யார் காரணம்...?''

''அந்த விஷயம் வேண்டாம்.''

''ஏன் வேண்டாம்...?''

''அது என் விதி...''

''கொலையாளி தண்டிக்கப்பட வேண்டும் அல்லவா...! சொல்லுங்கள்... யார் அந்த கொலையாளி...?''

''அது யார் என்று நான் சொன்னால் உனக்கு ஆபத்து வரும்... வேண்டாம். கொலையாளியை கடவுள் தண்டிப்பார். நான் மாடசாமியின் உடலில் இன்னும் ஒரு வருட காலம் மட்டும் தங்கியிருப்பேன். நான் அவனுடைய உடலை தேர்ந்து எடுத்ததுக்குக் காரணம் என்னுடைய ஜென்ம நட்சத்திரமும், அவனுடைய ஜென்ம நட்சத்திரமும் ஒன்று. பிறந்த தேதியும் ஒன்று. மாடசாமிக்கு நான் எந்த துன்பத்தையும் கொடுக்க மாட்டேன். எனக்கு சில விஷயங்களை நேரில் பார்க்க வேண்டியுள்ளது. அதற்காகவே மாடசாமியின் உடலில் இடம் பிடித்து இருக்கிறேன்...!''

''அப்பா...!''

''இனிமேல் நீ கேட்கும் எந்த கேள்விக்கும் பதில் சொல்லமாட்டேன்...''

அதற்குப் பிறகு சோபிகா எவ்வளவு தரம் கூப்பிட்டும் மாடசாமியிடம் எந்த சலனமும் இல்லை.

சோபிகா பூஜையை முடித்துக் கொண்டு விவேக்கிடம் வந்தாள்.

''ஸார்...! மாடசாமியோட உடம்புக்குள்ளே இருக்கிறது அப்பாதான்! அதுல எந்த சந்தேகமும் கிடையாது. இன்னும் ஒரு ரெண்டு தடவை பூஜை வெச்சா அப்பா உண்மையைச் சொல்லிடுவார்.''

விவேக் சோபிகாவை ஏறிட்டான்.

''மாடசாமிக்கிட்டயிருந்து உண்மையை வரவழைக்க சைக்கோதெரபிதான் சரியான வழி. மாடசாமியை சப்-கான்ஷியஸ் மைண்ட்டுக்கு கொண்டு போனா எல்லா உண்மையும் தானா வெளியே வந்துடும்... டாக்டர் வசீகர் நல்ல சைக்யாட்ரிஸ்ட். அவர்க்கு போன் பண்ணி வரவழைப்போம்.''

சோபிகா லேசாய் கோபப்பட்டாள்.

''ஸார்...! மாடசாமிக்கு சைக்கோதெரபி மூலமா ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏன்னா அவன் மனநோயாளி கிடையாது. இது முழுக்க முழுக்க ஸ்பிரிட். ஐ... மீன்... ஆவிகள் சம்பந்தப்பட்ட விஷயம்... அப்பாவின் ஆவி பதில் சொல்ல முரண்டு பிடிக்குதுன்னா அதுக்கு வேற ஒரு பரிகார பூஜை இருக்கு. அதைப் பண்ணினா சரியாயிடும்... அதுக்கப்புறம் அப்பாகிட்டயிருந்து எல்லா உண்மைகளையும் வாங்கிடலாம்...''

''ஓ... கே... சோபிகா... அந்த பரிகார பூஜையை உடனே பண்ணப் போறீங்களா...?''

''இல்லை... ஒரு அமாவாசை நாள்லதான் பண்ணனும்.''

''அதுக்குள்ளே ஒரு தடவை டாக்டர் வசீகரை வெச்சு மாடசாமிக்கு சைக்கோதெரபி கொடுத்து பார்த்தா என்ன...?''

சோபிகா அரைமனதோடு தலையசைத்தாள். ''இட்ஸ் ஓ.கே...! ஒரு தடவைக்கு மேல் சைக்கோதெரபி ட்ரீட்மெண்ட் வேண்டாம்.''

''விஷ்ணு...!''

''பாஸ்...!''

''சைக்யாட்ரிஸ்ட் வசீகர்க்கு போன் பண்ணி உடனே இங்கே வரச் சொல்லு...!''

விஷ்ணு செல்லில் தொடர்பு கொண்டு வசீகர்க்கு விஷயத்தைச் சொல்ல அடுத்த பத்தாவது நிமிடம் அவர், மாடசாமியை தனியறையில் படுக்க வைத்து சோதித்துக்



கொண்டிருந்தார். கையில் வைத்து இருந்த நியூரோ மீட்டரை அவனுடைய உடம்பு முழுவதும் ஒட்டிப் பார்த்துவிட்டு விவேக்கிடம் நிமிர்ந்தார்.

''இது ஒருவகையான மன நோய்... 'ஸிண்ட்ரோம்' டைப்...''

''டாக்டர் ரெட்டி குரல்ல பேசறானே! எப்படி டாக்டர்...? இங்கிலீஷ்ல நல்ல ஃப்ளுயன்ஸி... சோபிகா தன்னோட 'அப்பா ஆவி'ன்னு சொல்றதை நம்ப வேண்டியிருக்கு. மாடசாமிக்கு ஆடு மேய்க்கிறது தவிர வேற எதுவுமே தெரியாது. டாக்டர் ரெட்டியை முன்னே பின்னே பார்த்தது கூட கிடையாது!''

''நோ... ப்ராப்ளம் மிஸ்டர் விவேக்...! மாடசாமியை உடனடியா ஸ்பீடி ரெக்கவரி ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணுங்க. நான் அவனுக்கு ட்ரீட்மெண்ட் தர்றேன். அவனை சப்-கான்ஷியஸ் மைண்ட்டுக்கு கொண்டு வந்து அவன் மனசுக்குள்ளே இருக்கிற எல்லா விஷயங்களையும் வெளியே கொண்டு வந்துவிடலாம். பூமாவோட மரணம், பூபாலனோட மரணம், ஜோதி காணாமே போனது, ரெட்டியோட மரணம் எல்லாத்துக்கும் விடை கிடைச்சுடும்...''

சோபிகா குறுக்கிட்டாள்.

''ஒரே ஒரு நிபந்தனை டாக்டர்...!''

''என்ன...?''

''மாடசாமிக்கு அடிக்கடி சைக்கோதெரபி ட்ரீட்மெண்ட் கொடுக்க நான் ஒத்துக்க மாட்டேன். காரணம் மாடசாமியின் உடம்புக்குள் இருக்கிற அப்பாவின் ஆவிக்கு நீங்க கொடுக்கிற ட்ரீட்மெண்ட்கள் தொந்தரவாக இருக்கும்... சில சமயம் ஆவி உடம்பைவிட்டு வெளியேறி போய்விடவும் சாத்தியம் இருக்கு... அதனால இந்த ஒரு தடவை மட்டுந்தான் மாடசாமிக்கு சைக்கோதெரபி ட்ரீட்மெண்ட் தரணும்... இதுக்கு சம்மதமானா சொல்லுங்க. இல்லேன்னா மாடசாமியை நான் அனுப்ப மாட்டேன்...!''

வசீகர் சிரித்தார்.

''நான் மாடசாமிக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்தா அது உன்னோட அப்பா ஐ... மீன்... ரெட்டியோட ஆவிக்கு தொந்தரவாயிருக்குமா...? நல்ல ஜோக்... மாடசாமியை சப்-கான்ஷியஸ் மைண்ட்டுக்கு கொண்டு போய் கிண்டி கிழங்க எடுத்தா எல்லா உண்மையும் வெளியே வந்துடும்...''

விஷ்ணு விவேக்கிடம் குனிந்தான்.

''பாஸ்... உங்களுக்கு சாலமன் பாப்பையாவோட போன்நம்பர் தெரியுமா...?''

''எதுக்குடா...?''

''அவர்க்கு போன் பண்ணி ஒரு பட்டிமன்ற தலைப்பு கொடுக்கலாமேன்னுதான்...!''

''என்ன தலைப்புடா...?''

''மாடசாமியின் உடம்புக்குள் இருப்பது ஆவியே! பாவியே!''

## 13

ஸ்பீடி ரெக்கவரி ஹாஸ்பிட்டல்.

தனியறையில் மாடசாமி அனுமதிக்கப்பட்டிருக்க டாக்டர் வசீகர் இரண்டு நர்ஸ்களோடு சைக்கோதெரபி ட்ரீட்மெண்ட் தருவதற்கான ஆயத்தங்களில் இருந்தார்.

''மேரி... ஹெட் ரிஃப்ளக்டரை பேஷண்ட்டுக்கு ஃபிக்ஸ் பண்ணு...!''

மேரி கீழே இருந்த உட்டன் பாக்ஸைத் திறந்து ஹெல்மெட் மாதிரியிருந்த அந்த ஹெட்-ரிஃப்ளக்டரை வெளியே எடுத்துக் கொண்டிருக்க டாக்டர் விஜயசாரதி உள்ளே வந்தார்.

''என்ன வசீகர்...! ஏதாவது ஹெல்ப் தேவையா?''

''வாங்க சாரதி...! உங்க ஹாஸ்பிட்டல் வெல் எக்யூப்ட். வேண்டிய வசதி இருக்கு...!''

''ட்ரீட்மெண்ட் முடிய எவ்வளவு நேரமாகும்...?''

''எப்படியும் ரெண்டு மணி நேரமாகும்...!''

''மாடசாமிக்கு இப்போ கான்ஷியஸ் இருக்கா?''

''இல்லை... தூங்கப் பண்ணியிருக்கேன்... சவுண்ட்



ஸ்லீப். கிட்டத்தட்ட அன்கான்ஷியஸ்... உடம்பை என்ன பண்ணினாலும் வலிக்காது. ஆனா உள் மனசு விழிச்சுக்கிட்டு இருக்கும்...''

''இன்னிக்கு எல்லா உண்மைகளும் வெளியே வந்துடுமா...?''

''வரவழைக்கணும்...! இது எனக்கும் சோ..கொவுக்கும் நடக்கிற போட்டி. இதுல நான் ஜெயிச்சேயாகணும்...!''

வசீகரின் கோட் பாக்கெட்டில் இருந்த செல்போன் குரல் கொடுக்க - அவர் அதை எடுத்துக் கொண்டு அறையின் மூலையை நோக்கிப் போனார். பேச ஆரம்பித்தார்.

நர்ஸ்கள் இரண்டு பேரும் ஹெட் ரிஃப்ளக்டரை சரி பார்த்துக் கொண்டிருக்க டாக்டர் விஜயசாரதி தன்னுடைய கோட் பாக்கெட்டுக்களில் கைகளை நுழைத்தபடியே - படுக்கையில் சலனமில்லாமல் கிடந்த மாடசாமியை நெருங்கினார்.

பார்வையில் ஒருவித திருட்டுத்தனம்.

ஒரு கண்ணால் செல்போனில் பேசும் டாக்டர் வசீகரையும் இன்னொரு கண்ணால் இரண்டு நர்ஸ்களையும் பார்த்துக்கொண்டே மாடசாமிக்கு வலது பக்கமாய் வந்து நின்றார்.

மெல்ல கோட் பாக்கெட்டிலிருந்து கையை எடுத்தார்.

விரல்களில் ஸிரிஞ்சுடன் கூடிய அந்த சிறிய ஊசி இடம் பிடித்திருக்க - அதை ஸ்லோமோஷனில் மாடசாமியின் வலது தோள்பட்டைக்கு கொண்டு போனார்.

''ர்ர்ர்ரப்ப்ப்...!''

மாடசாமியின் வலதுகை குபீரென்று ஒரு நேர்கோடு மாதிரி உயர்ந்து விஜயசாரதியின் மணிக்கட்டை 'கப்'பென்று பற்றிக் கொண்டது.

''ஸாரி... டாக்டர்...!''

மாடசாமி சிரித்துக் கொண்டே எழுந்து உட்கார்ந்தான். டாக்டர் வசீகர் சிரித்துக் கொண்டே காதில் வைத்த செல்போனோடு திரும்பினார். செல்போனில் பேசவும் ஆரம்பித்தார்.

''மிஸ்டர் விவேக்...! நீங்க சொன்னபடியே டாக்டர் விஜயசாரதி மாடசாமி இருந்த ரூமுக்கு வந்தார்.

மாடசாமிக்கு ஏதோ ஊசிபோட முயற்சி பண்ணினார். இப்ப ஊசியும் கையுமா மாட்டிக்கிட்டார். ரூமுக்கு வர்றீங்களா...?''

வசீகர் பேசிவிட்டு செல்போனை கோட் பாக்கெட்டுக்குள் போட்டுக்கொண்டே டாக்டர் விஜயசாரதியை நோக்கி வந்தார்.

''அந்த ஊசியை இப்படி கொடுக்கறீங்களா டாக்டர்?''

## 14

போலீஸ் லாக்கப்.

டாக்டர் விஜயசாரதி தலை குனிந்து உட்கார்ந்திருக்க சுற்றிலும் விவேக், விஷ்ணு, சோபிகா, வசீகர், தனபாக்கியம், மாடசாமி அரைவளையம் போட்டு நின்றிருந்தார்கள்.

விவேக் சொல்லிக் கொண்டிருந்தான். ''டாக்டர்! உங்க மேல எனக்கு சந்தேகம் வந்தது எப்போ தெரியுமா...? ஜோதி ஹாஸ்பிட்டலிலிருந்து காணாமல் போன அன்னிக்கு அவளை யாராவது கடத்திக்கிட்டு போயிருப்பாங்களோன்னு நானும் மத்தவங்களும் பேசிட்டிருக்கும் போது நீங்க மட்டும் ஜோதி சுய உணர்வுக்கு வந்து தானாக எழுந்து போயிருக்கலாம்ன்னு சொன்னீங்க. அது எனக்குள்ளே லேசா ஒரு சந்தேகக்கோடு போட்டது. அந்த சந்தேகத்தை ஊர்ஜிதம் பண்ற மாதிரி விஷ்ணு ஹாஸ்பிட்டலைவிட்டு வெளியே வந்து ஆட்டோஸ்டாண்ட்ல விசாரிக்கும்போது ஒரு ஆட்டோ டிரைவர் வலிய வந்து ஜோதி ஒரு மாருதி காரில் ஏறிப் போனதாக சொன்னார். காரோட நம்பரைப் பார்த்தீங்களான்னு விஷ்ணு கேட்டதுக்கு நம்பரைப் பார்க்கலைனும் ஆனா காரின் பின்பக்க கண்ணாடியில் ஒரு ஸ்டிக்கர் வாசகம் இருந்ததைப் பார்த்ததாகவும் சொன்னார். அந்த வாசகம் இதுதான். 'இந்தியாவுக்குள் வாழ்பவன் இந்தியன் அல்ல. எவன் மனதுக்குள் இந்தியா வாழ்கிறதோ அவனே இந்தியன்' - இவ்வளவு நீளமான வாசகத்தை மனப்பாடம் பண்ணி டிரைவர் ஒப்பித்தது எனக்கு கொஞ்சம் நெருடலாபட்டது. அந்த டிரைவரை



க்ரைம் ப்ராஞ்ச் அதிகாரி ஒருவர் மூலமா கண்காணித்த போது உங்களுக்கும் அந்த டிரைவர்க்கும் நிழல் நட்பு இருந்தது தெரியவந்தது. பூமா, பூபாலன், டாக்டர் ரெட்டி இவர்களுடைய மரணங்களுக்கு நீங்கதான் காரணமாயிருக்க முடியும்ங்கிற தீர்மானத்துக்கு வந்தோம். உங்களைஎப்படி ட்ராப் பண்றது...! யோசனை பண்ணினேன். கடைசியில் இந்த ஆவி விவகாரம் கை கொடுத்தது. மாடசாமி உண்மையிலேயே மாடசாமி கிடையாது. அவர் கோயமுத்தூரில் ஒரு டாக்டர். டாக்டர்க்கு அம்மாவா நடிச்சது உண்மையிலேயே அவருடைய அம்மாதான். சோபிகாவுக்கும் இதைப்பற்றி முன்னாடியே சொல்லிட்டேன்.''

''பாஸ்...! என்கிட்ட மட்டும் இதை ஏன் சொல்லலை...!'' விஷ்ணு விவேக்கின் காதருகே கேட்டான்.

''நீ ஓட்டை வாய்டா...!'' விவேக் மெல்ல சொல்லிவிட்டு விஜயசாரதியை ஏறிட்டான்.

''என்னோட சைடு ஸ்டேட்மெண்ட் முடிஞ்சுது. இனி எங்களுக்கு உங்க சைடு ஸ்டேட்மெண்ட் வேணும். பூமா, பூபாலன், டாக்டர் ரெட்டி மரணங்கள் எதுக்காக...? உண்மையைச் சொன்னா நீங்க இந்த லாக்கப்புக்குள்ளே ரத்தம் சிந்த வேண்டியது இல்லை...''

விஜயசாரதி நிமிர்ந்தார்.

''சொல்லிடறேன்...!''

''ம்..., சொல்லுங்க...!'' விவேக் பேப்பரும் பேனாவும் எடுத்துக்கொண்டான்.

விஜயசாரதி முனகுகிற குரலில் பேச ஆரம்பித்தார்.

''ஹாஸ்பிட்டலுக்கு எதிரில் எஸ்.டி.டி. பூத் வெச்சிருந்த பூமாவுக்கும் எனக்கும் தொடர்பு இருந்தது. அதை காதல்ன்னு சொல்ல முடியாது. இஷ்டப்பட்ட போது ஜாலியா இருப்போம். போனவாரத்துல ஒருநாள் பூமா திடீர்ன்னு வந்து 'நான் இப்ப ரெண்டு மாசமா முழுகாமே இருக்கேன். எப்ப கல்யாணம் வெச்சுக்கலாம்'ன்னு கேட்டா. எனக்கு தூக்கிவாரிப் போட்டது. காரணம் அன்னிக்குத்தான் டாக்டர் ரெட்டி தன்னோட மகள் சோபிகாவை எனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்க சம்மதம் கொடுத்து இருந்தார். சோபிகா மேல

எனக்கு ஒரு பெரிய மயக்கமே உண்டு. பூமா இப்படி திடீர்ன்னு ஒரு குண்டைப் போட்டதும் இடிஞ்சு போய்ட்டேன். பணம் கொடுத்து அவளை சமாதானம் பண்ணப் பார்த்தேன். முடியலை. விஷயம் வெளியே பரவி நாலு பேர்க்கு தெரியறதுக்கு முன்னாடி அவளைத் தீர்த்துக்கட்ட திட்டம் போட்டேன். அப்பா, அம்மான்னு சொந்த பந்தம் இல்லாத பூமாவைத் தீர்த்துக்கட்ட நான் அதிகமா கஷ்டப்படலை. லாரி சர்வீஸ் நடத்திட்டிருந்த என் ஃப்ரண்ட் ஒருத்தனை உபயோகப்படுத்திக்கிட்டேன். பூமாவுக்குப் பின்னாடி சுத்திக்கிட்டு இருந்த பூபாலனை இதுல லிங்க் பண்ணி பிரச்னையை திசை திருப்ப நினைச்சேன். பத்திரிகை ஆசிரியர் பைரவமூர்த்தியை மிரட்டி காரியத்தை சாதிச்சேன். ஆனாலும் போலீஸ் பூபாலன் கொலை செய்யப்பட்டதாகக் கண்டு பிடிச்சுட்டாங்க. இதைவிட எனக்குப் பெரிய அதிர்ச்சி மனநிலை சரியில்லாத ஜோதிக்கு, பூமாவுக்கும் எனக்கும் இருந்த காதல் விவகாரம் தெரிஞ்சிருந்ததுதான். ஹாஸ்பிட்டலில் இருக்கும்போது அவளைத் தீர்த்துக் கட்டினால் போலீஸோட சந்தேகம் என்மேல் திரும்பலாம்ங்கிற பயம் இருந்ததால அவளை வேற ஒரு இடத்துக்கு கடத்திக்கிட்டு போய் வெச்சிருந்தேன். இந்த சமயத்தில்தான் டாக்டர் ரெட்டி தொழில் ரீதியா என்கிட்டே தகராறு பண்ண ஆரம்பிச்சார். இனிமேல் என்னுடைய ஹாஸ்பிட்டலில் பைபாஸ் சர்ஜரிகளை அட்டெண்ட் பண்ண மாட்டேன்னு சொன்னார். காரணம் கேட்டேன். என்னோட கேரக்டர் சரியில்லைன்னு சொன்னார். சோபிகாவையும் கல்யாணம் பண்ணி வைக்க முடியாதுன்னு சொல்லவும் எனக்குள் வெறி. விஷம் தோய்ந்த டயாஃப்ரி சுகர் மாத்திரைகளை உபயோகப்படுத்தி அவர்க்கும் ஒரு முற்றுப் புள்ளி வெச்சேன்.''

சோபிகா குறுக்கிட்டு கேட்டாள்.

''இப்போ ஜோதி எங்கே...?''

''என்னோட கோலியனூர் கெஸ்ட் ஹவுஸில் பத்திரமா இருக்கா. போலீஸ் விசாரணை, கெடுபிடியெல்லாம் முடிஞ்சதும் அவளைத் தீர்த்துக்கட்ட நினைச்சிருந்



தேன்...!''

விவேக் விஜயசாரதிக்கு பக்கத்தில் வந்தான்.

''டாக்டர்...! ஒரு பெண்ணை ஏமாத்தறதைவிட உலகத்துல பெரிய பாவம் எதுவும் கிடையாது. பூமாவை நீங்க கல்யாணம் பண்ணியிருந்தா இத்தனை பிரச்னைகளும் இத்தனை கொலைகளும் தேவையே இல்லாமல் நடந்து இருக்காது. இந்த உலகத்துல யார் வேணும்ன்னாலும் தப்பு செய்யலாம். ஆனா மூணே மூணு பேர் மட்டும் தப்பு செய்யக்கூடாதன்னு சொல்லுவாங்க. முதலாமவர் டாக்டர், இரண்டாமவர் டீச்சர், மூன்றாமவர் போலீஸ்.

இவங்கள்ல யார் தப்பு பண்ணினாலும் சரி பாதிக்கப்படுவது தனிநபர்கள் கிடையாது. ஒட்டுமொத்த சமுதாயம்...''

டாக்டர் விஜயசாரதி தலைகுனிந்து கண்களில் நீர் மல்கிக் கொண்டிருக்க -

விவேக்கும், விஷ்ணுவும் வெளியே வந்தார்கள்.

நிருபர்கள் கூட்டம்.

''பாஸ்... நான் பேட்டி கொடுக்கிறேன்... நீங்க தள்ளி நின்னுக்குங்க...!''

''கொடுடா...!''

விஷ்ணுவிடம் ஒரு நிருபர் கேட்டார்.

''ஸார்...! தலையில் ஒரே பொடுகு. பொடுகை ஒழிக்க என்ன செய்யலாம்...?''

[முற்றும்]

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 6/352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி. அசோகன். தொலைபேசி: 8544294